கலா நிலயம்.

V 8. No. 2. 10. 1. 1935

SL
N211, N28 KN
N35. 8. 2.
199200.

200

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஞு ஜனவரி மீ 10 உ [No. 2

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 17 |
| 1. | ஒத்தெல்லோ (அங்கம் 1. களம் 1.) Shakespeare's—"Othello" | 19 |
| 3. | நாராயணன் விளக்கமும் நாவுக்கரசரும் E. N. தணிகாசல முதலியார் B.A., B.L. | 22 |
| 4. | நகைச் சுவை R. நரஸிம்மன் B.A. (Hons) | 23 |
| 5. | சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்) வித்துவான் T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. | 25 |
| 6. | வில்லிபாரதம் (துரியோதனன்) K. T. விஜயராகவாச்சாரியார் B. A. | 26 |
| 7. | கம்பராமாயணம் (கார்காலப் படலம்) T. N. சேஷாசலம் B.A., B.L. | 27 |
| 8. | அணியிலக்கணம் (பாவிக அணி) | 29 |
| 9. | வர்த்தமானம் | |


## கலாநிலயம்

### உபாயத்தின் அபாயம்.

உயர்ந்த நூல்களென மதிக்கப்படுபவை பல, இவ்வுயிர்வாழ்க்கையை, அறம் பொருள் இன்பம் வீடு என்னப்படும் பயன்களைப்பெறுதற்கு அமைந்தவொரு உபாயம் என்று பெரும்பாலும் கூறும். இந்நான்கினுள்ளும், இப்பிறவியை அறுத்துமுத்திபெறுவதே இறுதியாய்க் கொள்ளநிற்கின்ற பயனாகும் என்றும், அவ்வீட்டிற்குஇன்பமும், இன்பத்திற்குப்பொருளும், பொருளிற்குஅறமும்உபாயங்களாகிநிற்கின்றன என்றும் எண்ணுவது வழிவழி வந்துள்ள வழக்கமாகஇருக்கின்றது. இதன்படி, இப்பிறவிதான், மீண்டும் பிறவிஎடுக்காதிருத்தற்கு அமைந்தவோர் உபாயமாவதுடன், இப்பிறவியின் சாதனைகளாகக் கருதப்படுகின்றவைகளையும்ஒன்றற்கொன்று உபாயங்களாகவே நினைக்கவேண்டியவர்களாகவும் முடிகின்றோம். நாம் வாழ்கின்ற வாழ்க்கையே நாம் பெற்றிருக்கின்ற பேறு ஆகும் என்ற எண்ணம், நமக்குத் தெரிந்தோ அல்லது நமக்கேயுந் தெரியாமலோ, வாழ்நாள் முழுவதும் நம்மை நீங்காநிழல்போலத் தொடர்ந்துவந்து நம் சிந்தனைகளையும் சொற்களையும் செய்கைகளையும் சித்திரஞ் செய்துசெய்து சீருறவைப்பதொன்றுதான் உத்தமம் ஆகுமே யொழிய, இவ்வாழ்க்கையை உபாயமாகக் கொண்டு வேறொன்று அடைவதற்கு இருக்கின்றதெனக்கருதி விவகரிப்பதனைத்தும், நாம் வாழ்கின்ற இவ்வாழ்க்கைக்கோர் கௌரவம் அளித்தபடியாகா[illegible] நினைக்கலுங்கூடும். "ஐயகோ, இந்தச் [illegible] ஏன்தான் [illegible]த்தேனே" என்றுஇதனை வெறுப்பது போன்றே, "இந்தவாழ்க்கையைக் கருவியாகக்கொண்டு, யான்இன்ன இன்னவைஇனிப்பெற வேண்டியவனாக இருக்கின்றேன்" என முயல்வதும், இவ்வாழ்க்கையை அவ் வாழ்க்கையின்பொருட்டே நலமுற மதித்துப் பாராட்டாத பான்மையைக் காட்டும். 'வாழ்கின்றோம்'என்ற அந்தத் தூயஉணர்வினை எய்தாமல், நமக்கு வாய்த்திருக்கின்ற இவ்வாழ்வினை விற்று வேறு ஏதோ வொன்று வாங்க நிற்கின்றோம் என்றநினைவினையே எய்தி விவகரிப்போமாயின் வாழ்நாள்முழுவதும்ஒருபெருங் குழப்பமாய் முடியாமல் இங்கு வேறு என்னசெய்யும். ஆதலாற்றான், அறத்தின் மூர்த்தியாய் அவதரித்த அப் பெருந்தகை திருவள்ளுவர்,

> அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்
> போஒய்ப் பெறுவ தெவன்

என்னச் சாற்றினர் என்பதில் ஐயமில்லை. "ஒருவன் அறத்தின் வழியே இல்வாழ்க்கையைச் செலுத்துவானாயின், அவன் அதனைக் கடந்துபோய்ப் பெறுகின்ற பயன் யாதுமில்லை" எனும்பொருளுடைய இக்குறள், அன்னவாறு பெறுவதற்கு ஒரு பயன் உண்டென்று நினைத்து விவகரிப்பவரைக் கண்டு அத் தெய்வப்புலவர் இரக்கங்கொள்கின்ற சித்திரத்தை, 'போஒய்' என்னும் அளபெடையினால் நம் கண்முன் காட்டித்தருவதுபோல் நிற்கின்றது. இதுவுமன்றி,

> இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
> முயல்வாரு ளெல்லாந் தலை

எனப் பின்னரும் வற்புறுத்தியிருப்பது நம்முடைய நினைவைவிட்டு அகலத்தக்கது ஒன்றுஅன்று. "வாழ்க்கை இது என்னுந் தன்மையை மதித்து வாழ்பவன், அதனைக்கொண்டுவேறுவேறு பெறவேண்டுமென்று முயல்பவர் எல்லாரினும் சிறந்தவனாவான்" என்னுஞ் செம்மையைச்செப்புகின்ற இந்தச்செய்யுள்,சிந்தனையாளர்தம் மனத்தின்கண் நறியமணமாகக் கமழ்ந்து உடல்முழுவதும் பரவி, அவர் செய்கின்ற கருமங்களனைத்தையும் கனிவிக்க வேண்டுமே. "ஐய, நீ யாது செய்கின்றாய்?" என்று எவரைக் கேட்பினும், "நான் வாழ்கின்றேன்" என்று பதிற் சொல்வாரை மருந்திற்குங் காண்டலரிது. "வர்த்தகஞ் செய்கின்றேன்,வழக்காடுகின்றேன்,உத்தியோகஞ் செய்கின்றேன்" என்று சிற்சில இயம்புவாரும், அல்லது இவைகளை இழந்து வருந்துவாருமே அல்லாமல், "யான் வாழ்கின்றேன், வேறு என்னசெய்தல் வேண்டும் என்று எண்ணி நீர் என்னை இக்கேள்வி கேட்கின்றீர்" என வியந்து நிற்பவரே, நந்திருவள்ளுவர்அனைய வித்தகர்கண்களுக்கு உவகைசான்ற காட்சிகளாவார். ஒரு குயிலின்பால் சென்று இந்தக்கேள்வி கேட்டால், "நான் வாழ்கின்றேன்" என்று கூவும்; மயிலுந் தன்னுடைய ஆட்டத்தால் அதனையே தெரிவிக்கும்; மானின் பார்வையும் அதுவே;மலர் மணமுற நகைக்கும். குயிலின்நாலைக் கேட்கின்றபோது, "நம்மிடையே வாழ்வது ஒன்றேனும் உளது" என நல்லோர் சிலர் இதயமுற மகிழ்ச்சியடைவார். "வாழ்கின்றேன்,நான் செய்வது அதுவே" என விளம்பவல்லவனே மனிதன். "ஜனத்தொகைக் கணக்கெல்லாம் பொய்; ஆயிரம் சதுர மைல்களுக்கு மனிதன் எனத் தக்கவன் ஒருவன் இல்லையே. பின், இத்துணை கோடி மனிதரிங்கு இருக்கின்றார் என்று கூசாமற் கூறும் அந்தக் கணக்கை எங்ஙனம் கொள்ளுவோம்! இறந்தபின் உத்தரகிரியைக்கு உதவிசெய்வதாக வாக்களிக்கும் இன்ஷுயரன்ஸ் கம்பெனிக்கு இரையாயிருப்பாரை வாழ்கின்ற மனிதரென்று ஒரு நாளுங் கருதலாகாது" என்று வருத்தமுடன் இயம்பி ஏங்குகின்றார் மேனாட்டுச் சிந்தனையாளர் ஒருவர்.

வாழ்வதே வாழ்க்கை யல்லாமல், இதனை வேறே ஒன்றிற்கு உபாயமாகக்கருதுவதன் அபாயம்இப்படி விளைகின்றது. ஆயினும், ஒன்று மனத்திற்கொள்ள வேண்டும். வாழ்க்கை,தான் அடையவேண்டிய பயன் என்று ஒன்றினை வேறாகக் கருதி விவகரிக்கின்ற இவ்வெண்ணமும் செய்கையும், அவ்வாழ்க்கையி னியல்பினைக் கெடுத்துவிடுதல் கூடும் என்று இங்கு உரைக்கின்றோமல்லாமல், அப்பயனே தீமைசெய்யுந் தரத்ததாகும் என யாம் இயம்பவில்லை. இவ்வேற்றுமையை மறவாதிருத்தல் மிக முக்கியமாம். 'நாம் வாழ்கின்றோம்' என்ற உணர்வை எய்தாமல், "இன்னதற்காக வாழ்கின்றோம்" என்னும்நினைவைக் கொண்டக்கால், அந்நோக்கத்தின் தாராதரம்ஒருபுறமிருக்க, வாழ்க்கையின் முழுமை சிதைந்து விடுகின்றதே என்பதுதான் எங்கள் குறை. இதனாற்றான் வாழ்க்கை என்னுமிது "உயிரோடிருத்தல்" என்னும்பொருளிற்கு இழிந்து கிடக்கின்றது. வாழ்க்கைக்கு வேறேயோர் பயனின் நோக்கம் உளது என்றநினைவு உள்ளேபுகுந்து உழக்குவதால், முழுமை சிதைந்துபோகி, மேலானதொன்றில் வைத்திருந்த அந்நோக்கமும் அழிந்து கீழானதொன்றை இம் மானுடமனம் பற்றிக்கொள்கின்ற விபரீதத்தையே எங்குங் காண்கின்றோம். வாழ்க்கை என்பது யாது என்று திருவள்ளுவரைக் கேட்டால், அவர் "வாழ்வாங்குவாழ்தலே வாழ்க்கை" என நயம்படச் செப்புவார். மற்று அதற்குப் பண்பும் பயனும் இல்லையோ என்று அவரை வினவினால்,

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது

என்றுகட்டுரைப்பார். இவ் "அன்பும்அறனும்உடையவர்களாய் இருத்தலே வாழ்வாங்குவாழ்தலாம்; அவ்வாழ்க்கையின் பண்பும்பயனும் யாதெனில், மீண்டும் அவ் வாழ்க்கையே காண்" என்னக் கட்டுரைத்திருக்கின்ற நம் தெய்வப்புலமை திருவள்ளுவர் தம்சொற்கள் நம்முடைய நெஞ்சில் ஊன்றி, கலையுணர்வுடைய கவிஞர்தம்கவிதையாம் அமுதமேயனைய நீர்பாய்ச்சப்பெற்று, அனுபவமென்னும் கதிரவன் ஒளியில்வளர்ந்து தழைக்கு மானால் அப்பொழுது வானினுறையுமத்தெய்வங்களெல்லாம் இம்மானுடவாழ்க்கையின் தண்ணறும் நிழலை நாடிவந்து தங்குவதற்கு உரியதாகுமே இவ்வுலகம்.

வேறு என்? வாழ்க்கையை முழுமனமுடன் கைக்கொண்டு வாழ்ந்திடற்குப்பதிலாக மாந்தர்,உயிரைத் தாங்குதற்கேற்ற ஒரு உபாயமாகவே வாழ்க்கையை வைத்து விவகரிப்பதால்இப்படிக்கெடுகின்றனர். உயிரைத் தாங்குவதே நம் கருமமும் கடனுமாம் என்று கருதிவிட்டால் அப்புறம் அதனைவிடச்சுமையானது வேறு ஒன்றுமில்லை. இந்தச்சுமையைத்தாங்கி நடப்பதற்கு எதனையும் ஊன்றுகோலாகக் கொள்ளற்குத் துணிந்துவிடுகின்றனர். எதிர்ப்பட்டவர் தோளையும் கழுத்தையும் பற்றிக்கொண்டு, அதனால் அவர் அழுந்துவதாலும் தாம் எழுந்துநின்றாற் போதுமென்றே மதிக்கின்றனர். பொய்யும் வஞ்சனையும் பகையும் புரிந்து அவைகளைத் தமக்குச் சும்மாடாக உதவும்படி முயல்கின்றனர். இவைகளோ உயிரின் பாரத்தைச் சுமப்பதை எளியதாக்காமல் தாமுமேபெரும் பாரம் ஆகிவிடுகின்றன. உண்ணுஞ் சோற்றிற்கும் உடுக்கும் உடைக்குமாகப் பொய்யும் வஞ்சனையும் பகையும் புரிவார் பலர். ஆயினும், உணவுஉடை களுடன் ஏனைய சவுகரியங்களுக்கும் வேண்டிய பொருள் வைத்திருப்போரும் ஈட்டுவோரும், உயிரைத் தாங்குகிற கஷ்டம் தீர்ந்தவர்களாதலின், வாழ்வாங்குவாழத் தலைப்பட்டுவிடுவார்கள் என்று எண்ணிவிடவேண்டா. செல்வம் உடையவர், புதிய புதிய வர்த்தகம் தொடங்குவார்; சட்டசபைகள் தேடுவார், குதிரைப்பந்தயங்களை நாடுவார், வழக்குகள் தொடர்வார். இவைகள் இல்லாமற் போனால் தமது உயிர் தளர்ந்து விழுந்துவிடும்போல் இவர்களுக்குத் தோன்றும். இவர்களைநோக்குகின்ற ஏழைகள், "நமக்குத்தான் வயிற்றிற்கோர் வழிதேட வேண்டிய அவசியம் இருக்கின்றது!பொய்யோ வஞ்சனையோ சமயோசிதமாகச் சிறிது புரியாமற்போனால் இக்காலம் பட்டினிகிடந்து சாகவேண்டியதுதான்; ஆகையால் நாம்தாம் இ[illegible]க்கின்

m 211, N28 K14
199206



றோம். இந்தப் பணக்காரர்கள் ஏன் இவ்வாறு உழலவேண்டும்" என்று மிக்க அதிசயங் கொள்கின்றனர். அந்தப் பணக்காரர்களோ இவ்வேழைகளை நோக்கி, "சீ சீ! பிடி சோற்றிற்கும் நான்கு முழந் துணிக்குமா, இப்படிப் பொய்யும் வஞ்சனையும் புரிகின்றது! சட்டசபை முதலிய இடங்களேனும், அவைகளால் கிடைக்கக்கூடிய பதவிகளேனும், வர்த்தக சாலைகளேனும் வழக்குப்புரட்சிகளேனும் சாதிக்கவேண்டியிருந்தால் அப்பொழுது எவ்வுபாயமும் உரியதே. இவ்வஞ்சனையும் பொய்யும், சோற்றுக்காகச் செய்கின்ற இவர்களை விட்டேனு பார். இதைவிடப் பிச்சையெடுத்துங் கூலிக்கு வேலைசெய்தும் பிழைக்கப்படாதா! அல்லது செத்தால்தான் என்ன!" என எண்ணி, இந்தப்பொய்யையும் வஞ்சனையையும் அடக்குவதற்கென்று சட்டங்கள் சில நிறுவப்புகுவார். வாழாமல் உயிர்ச்சுமக்கின்ற இவ்விரு திறத்தவர் நிலையும் நினைவும் அவ்வவர்களுக்கு ஏற்றவைகளாம். வாழ்க்கையை உயிர் தாங்கியிருப்பதற்குரிய உபாயம் என்ன எண்ண நேர்வதால் இருகோடியிலும்விளைகின்ற அபாயம்இத்தகையதே; இதனை, ஹென்றி தோரு என்பவர்,

"Absolutely speaking, the more money the less virtue; for money comes between a man and his objects, and obtains them for him; and it was certainly no great virtue to obtain it. It puts to rest many questions which he would otherwise be taxed to answer; while the only new question which it puts is the hard but superfluous one, how to spend it. Thus his moral ground is taken from under his feet. The oppertunities of living are diminished in proportion as what are called the "means" are increased. The best thing a man can do for his culture when he is rich is to endeavour to carry out those schemes which he entertained when he was poor"

என்று எடுத்துக்காட்டியுள இச் சிந்தனைகள் மனிதர் உள்ளத்தில் அழுந்தியிருந்தாலன்றி,முன்னே இங்குக் குறித்த அபாயத்தினின்று தப்புவது முற்றிலும் இயலாத தாகிவிடும்.

---

# ஒத்தெல்லோ

**[Shakespeare's—"Othello"]**

அங்கம் 1. களம் 1.

[14-வது பக்கத் தொடர்ச்சி]

*ப்ரபான்ஷியோ, தன் மாளிகையின் மேன்மாடச் சாளரத்தில் தென்படுகின்றான்.*

ப்ரபான்ஷியோ:—கடுமையுடன் இப்படிக் கூப்பிடுவதன் காரணம் என்ன? அங்கே யாது நிகழ்கின்றது?[1]

ராடரிகோ:—பெரியீர், உமது குடும்பத்தின ரெல்லாம் உள்ளே இருக்கின்றனரோ?[2].

இயாகோ:—கதவுகள் பூட்டப்பெற் றிருகின்றனவோ?

ப்ரபான்:—ஏன், எற்றுக்கு இதனைக்கேட்கின்றீர்?

இயா:—ஓ ஓ, ஐயா, கொள்ளை போயினீர்; அழகா இது[3]! உம் அங்கியை அணிந்துகொள்ளும்[4]; உம் இதயம் வெடித்துவிட்டது, உமது ஆன்மாவிற் பாதி இழந்துவிட்டீர்[5]; எழுந்திரும் எழுந்திரும்! குறட்டைவிட்டுக் கிடக்குமிவ் வூராரை மணியடித்தெழுப்பும்[6]; இல்லையேல், பேய்மகன் உம்மைத் தனக்குப் பாட்டனாக்கிவிடும்[7]. எழுந்திரும், ஐயா.

ப்ரபான்:—என்ன! உங்கள் புத்தியை எல்லாம் இழந்துவிட்டீர்களா?[8].

ராடரி:—மதிப்புமிக்க பெரியீர், என்குரல்தெரிகின்றதோ உமக்கு?

ப்ரபான்:—எனக்குத் தெரியவில்லை; யாவன் நீ?

ராடரி:—என் பெயர் ராடரிகோ.

ப்ரபான்:—ஆயின், பின்னுந் தீதாக நின் வரவு[9]; என் வாயிலைச் சுற்றி நீ நடமாட வேண்டாவென்று உனக்குநான்கட்டளையிட்டிருக்கின்றேன். என்மகள் உனக்கு ஆகமாட்டாள் என்று நான் ஒளிக்காமல்

குறிப்பு:—ஒத்தெல்லோவைத் தான் பகைப்பதற்கு இயாகோ கூறிய காரணம், எவ்வளவுதூரம் உண்மையென்பது நிச்சயமில்லை. ஆயினும், பின்நிகழ்ச்சிகளைக் கொண்டு இவன் குணத்தை மதிக்கப் புகும்போது, இங்குக் கூறிய இக்காரணமும் அம்மதிப்பிற்கு உதவிசெய்யு மாகையால், இதனை நன்கு நினைவில் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

(1) சாளரத்தில் தோன்றிய ப்ரபான்ஷியோ, தன்னைக் கூப்பிடுகின்ற கூக்குரலுக்குக் காரணம் என்னவென்று கேட்கின்றான். ப்ரபான்ஷியோ, டெஸ்டிமோனாவின் தந்தை.

(2) ......அல்லது யாரேனும்காணாமற்போயிருக்கின்றனரா என்பதைத் தெரிந்துகொள்—என்பது பொருள்.

(3) கொள்ளைகொடுத்து நிற்கின்றநீர்,இப்படிச் சும்மா இருப்பது அழகாகுமா—என்பது பொருள்.

(4) செய்ய வேண்டியன செய்யும்பொருட்டு வெளியிலே வரும்படி உம்முடைய அங்கியை (gown) அணிந்து கொள்ளும்—என்பது பொருள்.

(5) நீர் அருமையாய் வளர்த்த பெண் உம்மை மோசம் செய்துவிட்டாளாதலால் உமது இதயம் வெடித்துப்போக வேண்டுமே, என்றும், உம்முடைய ஆன்மாவில் பாதிஎன்று மதிக்கத்தகுந்த உமது மகளை இழந்துவிட்டீரே, என்றும் இயாகோ இதனால் குறிக்கின்றான். நிகழ்ந்திருப்பது ப்ரபான்ஷியோவிற்குத் தெரியாதாகையால், இந்தச் சொற்களைக் கேட்டு அவர் விந்தையெய்தி மனங்கலங்க வேண்டுமென்பது இயாகோவின் கருத்து. ஆன்மா என்பதுஇங்கு உயிர் என்று பொருள்படும்.

(6) ஊரில் ஆபத்து ஏதேனும் நேர்ந்தபோது ஊராரை எழுப்பிச் சேர்ப்பதற்காக அடிக்கும் ஆபத்துமணி.

(7) ஒத்தெல்லோவைப்பேயென்றும், அவனுக்குப்பிறக்கின்ற பிள்ளை பேய்மகனே ஆவானென்றும், ப்ரபான்ஷியோ விரைவில் சென்று தடுக்காவிட்டால், டெஸ்டிமோனா ஒத்தெல்லோவுடன் சேர்ந்து கருப்பமுற்றுவிடுவாள் என்றும், அதனால் பிறக்கின்ற அப்பேய்மகனுக்கு ப்ரபான்ஷியோ பாட்டன்முறை பாராட்டவேண்டி நேரும் என்றும் குறிக்கின்றபொருளுடையது இயாகோவின் இவ்வாசகம்.

(8) இவர்கள் பேசுகின்றவைகளின் பொருள் ப்ரபான்ஷியோவிற்கு விளங்காதாகையால், "வாயில் வந்ததைப் பிதற்றும் பித்தர்களா நீங்கள்" என்று கேட்கின்றான்.

(9) ராடரிகோ தன் பெயரைச் சொல்கின்றவரையில் அவன் யாரென்பதை ப்ரபான்ஷியோ அவனுடைய குரலிலிருந்து தெரிந்துகொள்ளவில்லை. பின், ராடரிகோ தன்

வெளிப்படையாய்ச் சொல்லக் கேட்டிருக்கின்றாய். மற்று, உணவும் வெறியுடைய குடியும் நிறைந்து பித்தேறி, துஷ்டத் துணிவுடன் என் அமைதியை இப்பொழுது கிளப்ப வருகின்றாய்.[10]

ராட:—ஐயா, ஐயா, ஐயா—

ப்ரபான்:—மற்று, இது, உனக்குக் கைக்கும்படி செய்ய, என் ஊக்கமும் இடமும் தம்மில் சக்தியுடையன என்னும் நிச்சயம் உனக்குக் கட்டாயம் இருக்கவேண்டுமே.[11]

ராட:—நல்லவேன் ஐயா, சற்றே பொறும்.

ப்ரபான்:—கொள்ளையென்று நீ யெனக்கு என்ன சொல்கின்றாய்? வெனிஸ் நகரம் இது. என் வீடு தனியானவன் குக்கிராமக் களஞ்சிய மன்று.[12]

ராட:—கௌரவம்மிக்க ப்ரபான்ஷியோ, கபடற்ற தூய ஆன்மாவுடன்[13] நான் உம்பால்வருகின்றேன்.

இயா:—எஎ, ஐயா! உம்மை ஏவுவது பேயாயின், கடவுளுக்கு ஆட்செய்ய இணங்காதவர்களில் நீர் ஒருவர்[14]. உமக்கு உபகாரம்செய்யவருகிறவர் நாங்களாயிருப்பதாலும், மற்று, எங்களை நீர் விட்டேற்றுளர்களென்றுநினைப்பதாலும், உமதுமகள் ஒரு பார்பெரிகுதிரைக்கு வாழ்க்கைப்படச் சம்மதிப்பீர்.[15]

ப்ரபான்:—நீ ஒரு துஷ்டன்.

இயாகோ:—நீர் ஒரு—செனட்சபை அதிகாரி.[16]

ப்ரபான்:—இதற்கு நீயே உத்தரஞ் சொல்வாய்: உன்னை நான் அறிவேன், ராடரிகோ.[17]

ராட:—எதற்கு வேண்டுமாயினும் நான் உத்தரஞ் சொல்வேன். இதுகிடக்க, நும்மையான்வேண்டுவது ஒன்றுண்டு[18]; நடுநிசிகடந்த அமைதியுடையஇவ்விரவின் காவலில்[19], சாதாரண கூலிக்காரப் படகோட்டிக் கயவனொருவனினும் அதிகமும் குறைவும்அற்ற துணையுமின்றி, உமது அழகிய புதல்வி, ஒரு காமுக மூரனது முரட்டுமுயக்கிற்குக் கொண்டுபோகப்பட வேண்டுமென்பது[20]— ஒருவாறு அப்படித்தான் இருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுவது போலவே-உமது இஷ்டமும் அறிவுமிக்கஅனுமதியுமாகி இருக்குமானால்—இது உமக்குத் தெரிந்திருந்து சம்மதமும் பெற்றிருக்குமானால்— பின், நாங்கள் உமக்குத் துணிவுமிக்கதுடுக்கான பிழைகளை இழைத்தவர்களாவோம்; மற்று, இதனை நீர் அறியீராயின், உமது பிழையுடைய வசையையே பெற்றோம் என்று எனது ஒழுக்கமுறை கூறுகின்றது[21]. மரியாதை எல்லாங் கடந்து, உமது கௌரவத்தினோடு இப்படி விளையாடி அலக்ஷியஞ்செய்வேனென்று மதிக்காதீர். உமதுமகள்—அவளுக்குநீர் அனுமதி கொடுத்ததில்லையாயின் - மீண்டுஞ்சொல்கின்றேன், - இங்குமாய் எங்குமாய்ச் சுழலும் ஒரு மட்டுக்குமிஞ்சின அன்னியனில் தன்னுடைய கடமையையும் அழகையும் அறிவையும் செல்வத்தையும் பிணித்து, வெட்கமின்றி அதிகாரத்திற் கடங்காமல் கிளம்பிவிட்டாள்[22]. நேராக நீரே திருப்திசெய்துகொள்ளும்: அவள் தன் அறையிலேனும் இம்மனையிலேனு மிருப்பாளாயின்,

பெயரை விளம்பித் தன்னைத் தெரிவித்துக்கொண்டதும், ப்ரபான்ஷியோ தன் வெறுப்பைப் பின்னும் அதிகமாகக் காட்டுகின்றான். "இப்படி, நள்ளிரவில் என் வீட்டின்முன் வந்து கூக்குரல் இடுபவர் யாருக்கும் நான் நல்வரவு கூறமாட்டேன். மற்று, இப்படிச் செய்கின்ற நீ ராடரிகோவும் ஆனால், உன்னை இன்னும் பின்னும் வெறுக்கின்றேன்-என்பது பொருள்.

(10) என்மகளை உனக்குக்கொடுக்கமாட்டேனென்றும், அல்லா நாடி நீ என் வீட்டிற்கு வரவேண்டாவென்றும் நான் சொல்லியிருந்தும், வயிறு நிறையத்தின்ற களிப்பினாலும், மதுக்குடித்த வெறியினாலும் இங்கு வந்து இப்படிக் குழப்பம்செய்யத் துணிந்தாயல்லவா; உன்னை என்னசெய்கின்றேன் பார்—என்பது பொருள்.

(11) இந்தத் துணிவிற்குஉரியதண்டனையை உனக்குச் செய்தே தீருவேன் என்பதை, என்னுடைய செய்தியை அறிந்திருக்கின்ற நீ நிச்சயமாக உணர்ந்துகொண்டிருக்க வேண்டுமே.

ஊக்கம் - மனோதிடம். இடம் - தன் மனையிலுள்ள ஏவலாளர் முதலியவர்களின் உதவி - அல்லது; தன் பதவியால் தனக்கிருக்கும் அதிகாரம். இது - துணிந்து வந்து என் அமைதியை நீ கலைக்கின்ற இக்காரியம். கைக்கும்படி - கசக்கும்படி - இக்காரியம் செய்ததற்காக நீ வருந்தும்படி, தண்டிப்பேன்—என்பது பொருள்.

(12) என்வீடு வெனிஸ்நகரத்தில்இருப்பதால்அதனைக் கொள்ளையடிப்பதென்பது இயலாது - என்பதுபொருள்.

(13) ஆன்மா என்று பொருள்படும் soul என்னும் ஆங்கிலச்சொல், நம்மில்வேறாகி நம்முள்ளே இருப்பதாகக் கருதப்படும் ஆன்மா அன்றியும், உயிர் உள்ளம் உணர்வு ஊக்கம் முதலியவைகளையும் பொதுவாகக் குறிக்கலாம். ஆன்மா என்பது இங்கு உள்ளம் என்று பொருள்படும்.

(14) "கடவுளுக்கு ஆட்செய்வது மிக்க நல்லகாரியம். மற்று அப்படி ஆட்செய்யும்படி ஏவுகின்றவர்களும் நல்லவர்களாயிருந்தால்தான் நான் அதற்கு உடன்படுவேன், என்று இருப்பது மதியீனமல்லவா. அத்தகைய மதியிலிகளில் ஒருவர் நீர். பேயேவந்து, கடவுளை வணங்கும்படி ஏவினாலும், வணங்குவது அன்றோ நலம்" என்பது பொருள். "எங்களை நீர் மதிக்கவில்லை என்ற காரணத்தால், நாங்கள் உம்முடைய நன்மைக்காகச் சொல்கின்றவைகளைக் கேட்காதிருக்கலாமா" என இக்கருத்தை இயாகோ வெளிப்படையாகக் கூறுகின்றான்.

(15) விட்டேற்றுளர் - முரட்டுத்தனமுள்ள கீழ்மக்கள். பார்பெரிக் குதிரை என்று இங்கு ஒத்தெல்லோவைக் குறிக்கின்றான். இது குதிரை ஜாதிகளில் ஒன்று.

(16) 'நீ ஒரு துஷ்டன்' என்று ப்ரபான்ஷியோ வைததற்கு எதிராக, இயாகோ, "நீர் ஒரு" என்று துவக்கியபோது இவனும் ஏதோ வசைமொழி கூறி ஏசப்போகிறானென்று நாம் எதிர்பார்த்திருக்க, அதற்கு மாறாக அவன் —"ஒரு செனட்சபை அதிகாரி" என்று முடித்துவிடும் இது இவன் சொற்றிறமையை நன்கு காட்டுகின்றது. "நீ ஒரு அதிகாரியாயிருப்பதால்...நான் உன்னைஒன்றும் வையமாட்டாதவனாய் இருக்கின்றேன்" என்னும் குறிப்புடைய இதனுள்வையக்கூடியவசையனைத்தும் அடங்கியே இருக்கின்றது.

(17) இயாகோவை ப்ராபான்ஷியோதெரிந்துகொள்ளவில்லை. தெரிந்துகொள்ளாதபடி இயாகோதன்குரலைமாற்றிக்கொண்டிருப்பினும் இருப்பான். "உன்னோடு வந்து என்னை இப்படிப் பேசுகின்றவன் யாரென்று அறியேன். ஆயினும் ராடரிகோ, உன்னை நான் அறிவேனாகையால் இந்தப்பொறுப்பிற்குநீயேஆளாகின்றாய்'—.என்பதுபொருள். உத்தரஞ்சொல்லல்—செய்த காரியத்திற்குத் தக்க சமாதானஞ் சொல்லவில்லையானால் அதற்குரியதண்டனையைப் பெறுதல்.

(18) நீர் இதனிற்குப் பதிற்சொல்லும்படிநான் வேண்டிக் கொள்கின்றேன்—என்பது கருத்து. உமது சம்மதத்தின்மேல், டெஸ்டிமோனா ஒத்தெல்லோவுடன் போயிருப்பாளானால், நாங்கள் வந்து உமது அமைதியைக் குலைப்பது எங்கள் பிழையாம்; அவள் செய்தது உமக்குத் தெரியாதாயின், அதனைச் சொல்லவருகின்ற எங்களை நீர் இப்படி இகழ்ந்துவைவது உமது பிழையாம்"-என்பதுஇனி நிகழும் ராடரிகோவின் வாசகங்களில் அடங்கிய பிண்டப்பொருள்.

(19) காவலில் = இரவுக் காவற்காரர்களால் காக்கப்படும் வேளையில்.



பின், இப்படி உம்மை மருட்டியதற்காக, துரைத்தன நீதியை என்மீது அவிழ்த்து விட்டுவிடும்[23].

ப்ரபான்:— பஞ்சின்மேல் தட்டுங்கள்[24]. ஹோ, எனக்கோர் விளக்குக் கொடுங்கள்! - என்சனங்களை அழைத்து எழுப்புங்கள். - இந்தச் சம்பவம் என் கனவுபோன் றில்லாம லில்லை[25]. அதன் நம்பிக்கை என்னை இப்பொழுதே அழுத்துகின்றது[26]. வெளிச்சம் எங்கே! வெளிச்சம்!

[சாளரத்தை விட்டுப் போகின்றான்]

இயாகோ:—விடைகொள்கின்றேன்; ஏனெனில், இப்பொழுதுநான் உன்னைவிட்டு ஏகவேண்டும். மூரனுக்கு விரோதமாய் நான் கொணர்ந்து நிறுத்தப்படுவது - இங்கு இருப்பேனாயின் அப்படித்தான் செய்யப்படுவது நிச்சயமாதலின்-தகுதியாகவேனும், என்னுடைய இடத்திற்கு ஆரோக்கியமாகவேனும், தோன்றவில்லை[27]. ஏனெனில், இதனால் இவன் ஒருவாறு வசையுண்டு வருந்தும்படி நேரினும், நம் துரைத்தனமானது தனக்கு அபாயமின்றி இவனைத் தள்ளிவிட இயலாதென்பது அறிவேன். ஏனெனில், இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஸைப்ரஸ் யுத்தத்திற்கு உரத்தகாரணத்தால் இவன் அனுப்பப்படுகின்றான். தம் காரியத்தை நடத்திவைக்க இவனுடைய ஆழமுடையவர் அவர்களுக்கு, தம் ஆன்மாவையே ஈடுவைத்தாலும், வேறு ஒருவன் இல்லை[28]. இவைகளையெல்லாம் மதித்து, நரகவேதனையை நான் வெறுக்கின்றவாறு அவனை வெறுக்கின்றேனாயினும், தற்கால ஜீவனத்தின் அவசியத்திற்காக, அன்பினது கொடியையும் பாவனையையும் காட்டவேண்டும்[29]; உண்மையில் அது ஒரு பாவனையே தான். நீ அவனை நிச்சயமாகக் கண்டுபிடிக்கும்படி, எழுப்பப்பட்டிருக்கிற இந்தத் தேடுங்கூட்டத்தை 'ஸாஜிட்டாரி' க்கு[30] நடத்திச்செல்; அங்கு நான் அவனுடன் இருப்பேன் நல்லது, போகின்றேன்.

[போகின்றான்]

[ப்ரபான்ஷியோவும், விளக்குக்கள் ஏந்திக் கொண்டு வேலைக்காரர்களும் கீழே வருகின்றனர்.]

ப்ரபான்:—நிகழ்ந்த பொல்லாங்கு இது நிச்சயம் நிச்சயமே. போய்விட்டாள் அவள். இனி, இகழ நிற்கின்ற என் ஆயுளில் வருவதற்கிருப்பது கைப்பேயன்றி வேறில்லை[31].—இந்தா, ராடரிகோ,—அவளை நீ எங்கேபார்த்தாய்—? ஓ அவலமாய்ப்போன பெண்ணே![32]—மூரனுடன் என்று சொன்னாய்? - யாரே ஒரு தந்தையாயிருக்க இசைவார்[33]?-அவள்தான் என்பதை எப்படித் தெரிந்துகொண்டாய்? எண்ணமெல்லாங்கடந்து அவள்என்னை வஞ்சிக்கின்றாளே!- உன்னிடத்து அவள் யாது கூறினாள்?—இன்னும்சில விளக்குக்கள் கொண்டுவாருங்கள்! என்கிளைஞரைஎல்லாம் எழுப்புங்கள்! கலியாணம்செய்துகொண்டுவிட்டார்களென்று நினைக்கின்றாயா?

ராட:—விட்டார்களென்றுதான் நான் உண்மையாக நினைக்கின்றேன்.

ப்ரபான்:—ஓ தெய்வமே!— எப்படி வெளியேறினாள் அவள்?—ஓ, உதிரத்தின் துரோகமே[34]! தந்தைமார்களே, இந்நாள் முதல், நும்முடைய பெண்கள் நடிக்க நீர் காண்பதுகொண்டு அவர்மனத்தினை நம்பி மதிக்காதீர்[35]—இளமையின் பெண்மையின் இயற்கைக்கு அக்கிரமஞ் செய்யக்கூடிய வசியங்கள்

(20) சாதாரண... துணையுமின்றி = கூலிக்குப் படகோட்டும் ஒருவனைவிட நல்ல துணையில்லாமல் (அதாவது அவனையே துணையாகக்கொண்டு)டெஸ்டிமோனா போனாள்- இது தகுமா - என்பது பொருள். டெஸ்டிமோனா, ஒத்தெல்லோ இருந்தவிடம் போய்ச் சேர்வதற்கு ஓர் படகில் சென்றிருக்கவேண்டுமென்பது தெரிகின்றது. முயக்கு = கட்டியணைத்தல்.

(21) எனது ஒழுக்கமுறை கூறுகின்றது = நான் கற்றிருக்கின்ற ஒழுக்கமுறையின்படி, நீர் எங்களை வைவது பிழையே என்பது தெரிகின்றது.

(22) தன்னுடைய நாட்டைவிட்டு வந்து கண்டவிடமெல்லாம் திரிகின்றவனும் வீண் ஆடம்பரமுடையவனும் ஆகிய அன்னியன் என்று ஒத்தெல்லோவை இகழ்கின்றான். அன்னியனில...பிணித்து = தன் கடமை முதலியவைகளை அவனுக்கு வசமாக்கி.

(23) சட்டப்படி நான் அடையக்கூடிய தண்டனைகளுக்கெல்லாம் என்னை உள்ளாக்குங்கள்.

(24) அக்கால வழக்கத்தின்படி "சிக்கிமுக்கிக் கல்லிலிருந்து பஞ்சைப் பற்றவைத்துத் தீ மூட்டுக" என்றுகூறுகின்றான்.

(25) "இது எனக்குக் கனவேபோல் தோன்றுகிறது" என்றேனும், அல்லது, "இப்படி நிகழ நான் ஒரு கனவு கண்டேன், அந்தக் கனவேபோல் நேர்கின்றதே" என்றேனும் பொருள்படலாம்.

(26) இது நிச்சயந்தான் என்று இன்னும் ஏற்படவில்லையாயினும், ராடரிகோ சொல்வதிலிருந்து இது நேர்ந்திருக்கலாம் என்று நான் சம்பத்தலைப்படும்போதே, அதனால் என் மனம் அழுந்துகின்றதாயின், நிச்சயம் என்று ஏற்பட்டபின் நான் எப்படித் தாங்குவேன்-என்கிறான்.

(27) கொணர்ந்து நிறுத்தல் = சாக்ஷி சொல்லும்படி கூப்பிடுதல். தன் இடத்திற்கு ஆரோக்கியமில்லையென்பது, "நான் ஒத்தெல்லோவின் கீழ் உத்தியோகம்செய்கின்றேனாதலால், அவனுக்கு விரோதமாகச் சாக்ஷி சொல்ல நேர்வது என் உத்தியோகத்திற்கு ஆபத்தாய் முடியும்—என்பது பொருள்.

தான் இதில் சம்பந்தப்பட்டிருப்பது வெளியாகாதபடி இக்கள்வன் இயாகோ, ப்ரபான்ஷியோ கீழே இறங்கி வருவதற்குள் போய்விடுகின்றான்.

(28) துரைத்தன அதிகாரிகள், இது பற்றி ஒத்தெல்லோவைச்சிறிது வைதால் வைவார்களே ஒழிய அவனை வேலையைவிட்டுத் தள்ளிவிடமாட்டார். ஏனெனில், இப்பொழுது ஸைப்ரஸில் நடக்கிற போரிற்கு இவன் மிகவும் அவசியமாக இருக்கின்றான். இவனைத் தள்ளிவிட்டால் இவனளவு திறமை வாய்ந்த போர்த்தலைவன் எவ்வளவு தேடினாலும், வேறு அகப்படமாட்டானாகையால், பின் இந்தப் போர் தோற்று ஆபத்தாய்முடியும்...ஆகையால் அவனைத் தள்ளமாட்டார். ஆழமுடையவன் = ஆழ்ந்த திறமையுடையவன். உரத்த காரணம் = என்னை இகழாதீர் என்றென்று இரைந்து பேசி வற்புறுத்துவது போன்ற முக்கியமான காரணம். காரணமே தன்னைத் தன்னுடைய வலிவினால் வற்புறுத்திக்கொள்கின்றதாம். ஆன்மாவை ஈடுவைத்தாலும் = ஒத்தெல்லோவிற்கு நிகரான ஒருவனைப் பெறுவதற்கு இவ்வதிகாரிகள் தம்ஆன்மாவையே ஈடாகக்கொடுத்துக் கேட்டாலும்.

(29) கொடியும்' பாவனையும் = வெளித்தோற்றமும் நடிப்பும்.

(30) "ஸாஜிட்டாரி" என்பது இன்னதென்று தெரியவில்லை. ஒத்தெல்லோ வென்னிஸ் நகரத்தில் தங்கியிருந்த விடுதியின் பெயராக இருக்கலாம். இது அந்நகரத்தில் உள்ள ஆயுதச்சாலையின் பெயரென்றுஞ் சிலர் கருதுகின்றனர்.

(31) இனி, என் ஆயுள் முழுவதும், "பெண்ணைப் பறிகொடுத்தவன்" என்று இகழப்படுவேன்; இதனால் நான் மனங்கசந்து கிடக்கவேண்டும்—என்பது பொருள்.

(32) மனந்தடுமாறுகின்ற ப்ரபான்ஷியோ, ராடரிகோவைச் சில கேட்பதும், தன் மகளை நினைத்து இரங்குவதுமாக மாறி மாறிப் பேசுகின்றான்.

(33) இப்படி டெஸ்டிமோனாவே என்னை வஞ்சித்துவிட்டாளென்றால், இனி எந்தத் தகப்பன்தான் ஒரு பெண்ணைப் பெற்று வளர்க்கவேண்டுமென்று [illegible]

இருக்கவில்லையா? இப்படிப்பட்டதுபற்றி ஏதேனும் ராடரிகோ, நீ படித்திருக்கின்றாய் அல்லவோ [36]?

ராட:—ஆம், ஐய, இருக்கின்றேன்; உண்மையே.

ப்ரபான்:— என் தம்பியை எழுப்பு—ஓ நீயேதான் அவளை அடைந்திருத்த லாகாதா!—சிலர் ஒருவழி; வேறுவழி சிலர் [37].—அவளையும் மூரனையும் எங்கே நாம் கண்டுபிடிக்காலம் என்பது உனக்குத் தெரியுமோ?

ராட:—நல்ல காவல்கொண்டு என்னுடன் நீர் ஏக இசைவீராயின், அவனை நான் கண்டுபிடிக்கக்கூடும் என்று எண்ணுகின்றேன்.

ப்ரபான்:—தயைசெய்து நடத்திச்செல். ஒவ்வொரு வீட்டிலும் கூப்பிடுவேன்; பலவற்றில் என்சொல் [38] செல்லக்கூடும்—ஆயுதங்கள் கொண்டுவாருங்கோள்; இரவிற்கென்று அமைந்த அதிகாரிகள் சிலரை எழுப்புங்கள்—ஆஹா, நல்ல வென் ராடரிகோ—நின் சிரமத்திற்கு நான் ஈடுசெய்வேன் [39].

[போகின்றனர்]

எனக்கு நேர்ந்த இக் கதியே எல்லாத்தந்தைமார்களையும் வெறுத்த மனத்தினர் ஆக்கும்—என்பது பொருள்.

(34) என் இரத்தத்திலிருந்து பிறந்த என்மகளேயோ எனக்குத் துரோகம் செய்தது—என்பது பொருள்.

(35) பெண்களெல்லாம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று நடிக்கும் வஞ்சனையுடையவர்கள் ஆதலால், தந்தைமார்களே, உம் மகள், உம்மீது அன்புடையவர்போலும், ஒன்றுமறியாப்பேதைகளே போலவும், சொல்வது செய்வது ஒன்றையும் நம்பாதீர். உங்களைக் கைவிட்டு வேறோர் காதலனைச் சென்றடைவதற்கே அவர்தம் கள்ளமுடைய மனம் சூழ்ந்துகொண்டிருக்கும்.

(36) ஒருகால், டெஸ்டிமோனாவின் இளமையையும் பெண்மையையும், வசியம்செய்கின்ற மாய மந்திரங்களால் மயக்கி, அவ்வியற்கைகளை எல்லாங் கெடுத்து, ஒதெல்லோ கவர்ந்துகொண்டுவிட்டானோ என்று ஐயுற்றுக் கேட்கின்றான். ஆயினும், இந்த வசியமந்திரங்கள் இருப்பது உண்மையோ அன்றோ என்ற சந்தேகத்தால், "நீ இதுபற்றி ஏதாவது படித்திருக்கின்றாயோ" என்றுகேட்கின்றான்.

(37) சிலர் ஒருவழி, வேறுசிலர் வேறு வழி, சென்று தேடுங்கள்—என்பது பொருள்.

(38) என்செல்வாக்கினால் இவ்வீடுகள்பலவற்றிலிருந்து எனக்கு உதவி கிடைக்கும்.

(39) ராடரிகோவை, வைதுகொண்டு ஆரம்பித்த ப்ரபான்ஷியோ, அவனைப் பாராட்டி முடிக்கின்றான்.

முதற்காம் முற்றிற்று.

---

# நாரணன் விளக்கமும் நாவுக் கரசரும்

இதுகாறும் நாரணன்செய்த திருவவதாரங்கள் ஒன்பது. பரமனது சக்தியில் முதன்மைபெற்றும், சிவபெருமான் இடதுபாகம் அமர்ந்ததால் சங்கரநாராயணனென்னும்* தனிநாமம் பெற்றும், உலக துன்பங்களை யொழித்து இத்திருமால் அரன் திருநாமத்தையே எங்குநிறுவியதை அப்பர் ஆங்காங்குக்குறிப்பிட்டுள்ளார். பரமனது சக்தி, சொரூப லக்ஷணத்தில் காணும்படிநிற்பது உமாதேவியாரென்றும், அச்சக்தி தடஸ்தலக்ஷணத்தில் செம்மையாகக்காணப்படுவது திருமாலாம் என்றும், அத்திருமாலே ஓய்வின்றி உலகத்தின் துன்பத்தை ஒழிப்பதற்கு ஆங்காங்கு வேண்டிய உருவங்களையெடுத்து வெளிவந்து பாவத்தையுந் துன்பத்தையும் விலக்கிப் புண்ணியத்தை நிலைநிறுத்தி உலகத்திற்கு இன்பத்தை அளிக்க ஓயாமல் முயன்று வருகின்றனரென்றும், தேவாரம் உணர்த்துகின்றது. நந்தியெம்பெருமானைப்போல் ஞானகுருவாய்த் தத்துவவிளக்கம் செய்வதுடனே, கருமம் வேறு, பக்தி வேறு, ஞானம்வேறு எனக்காட்டாது, இம்மூன்றும் முப்பட்டைப் பளிங்குபோல், சன்மார்க்கத்தின் முப்பக்கங்களாகும் எனக்காட்டி, க்ஷத்திரிய தருமமான துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்ய ஞானக்கண்ணாலும் சிறிது உலகத்தைக் காணவேண்டுமென்பதை நரனுக்கு விளக்கி, ஊனக்கண்ணால் உணரக்கூடாதபதியின் செய்கையையும் புலப்படுத்திய அக் கண்ணன் பாரதத்தில் புரிந்தனவனைத்தும் "ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே சூழ்க வையகமெலாம் துயர்தீரவே" என்று சிவபிரானைவாழ்த்துவதுபோல அமைந்திருக்கின்றது. ஆதலால் சைவசமயாசாரிகள் பார்வையால் காணப்பட்ட பாரதம் நர-நாரணவிசயமே ஆகுமென முன் கட்டுரையில் விளக்கலானேன்.

இவ்வாறு விளக்குவதால் தருமனது மாண்புக்கு ஒளி அதிகரிக்குமே யன்றி, அதை அந்தகாரத்தில் அழுத்தாதுஎன்பது திண்ணம். உதிட்டிரன் தருமமே வடிவானவனாதலால், அத்தகைய அரசன் உலகாளாது, துரியோதனனை ஆளவிடின் கலி தனக்குரியகாலத்திற்குப் பல்லாண்டு முன்னரே வந்துவிடுமென்பதை அறிந்த திருமால் பாரதப்போர் விளைவிக்கும் தொண்டில் ஈடுபட்டனர். திருமாலின்றேல் பாரதமின்றென்னும் உண்மை, சகாதேவனும் உணர்ந்தான். அக்காலத்திய அறிஞர் யாவரும் உணர்ந்தார். ஆதலால் கண்ணன் பாரதக் கதைக்கு இன்றியமையாத திருவுருவமாய்நிற்றலால், அருச்சுனனுக்குச் சாரதித்தொழில் பூண்டாலும் தன்னிகரில்லாத்தலைவனாய்க் காணப்படுகின்றார். இவ் வவதாரபுருஷனது ஒளியாலும் அவன் சீடனும் மைத்துனனுமாகிய அருச்சுனனது ஒளியாலும், சூழப்பட்டிருக்கிற தருமனது மாண்பு, ஆராய்ச்சியினால் காணக்கூடியதாய் நிற்கின்றதே யல்லாமல், ஏனையகாவியங்களில் கதாநாயகரது தன்மை வெளிப்பட்டு நிற்பதுபோல், வெளிப்படையாகக் காணப்படவில்லை. ஆகையால், பாரதத்தில் கண்ணனையே கதாநாயகனாய்க் கூறினாலும் குற்றமாகாது, அல்லது பார்த்தனையே கதாநாயகன் எனினும் பொருந்தும். உத்தியோகபருவத்திற்குமுன்னேயும் பின்னேயும் பாரதக் கதையின் கோப்பு அருச்சுனனுக்குப் பின்னே செல்கின்றதுபோல் தருமனுக்குப்பின்செல்லவில்லை. தமிழ் இலக்கணமுறையில் ஒருகாப்பியத்தின் கதாநாயகன் தன்னிகரில்லாத் தலைவனாயிருப்பது இன்றியமையாததாகும். அறமேயோர்வடிவெடுத்து இருந்தனன்யுதிட்டிரனெனில், அது ஒன்றே காப்பியத்தலைவனாயிருப்பதற்குப்போதாது. இந்த யுதிட்டிரனால், நிவாதகவச காலகேயர் வதம் நடந்திருக்க முடியுமோ? காண்டக வனத்தை அக்கினிக்குத் தானம்செய்ய முடியுமோ? ஒற்றைத்தேருடன் விராடநகரின் ஆனிரையை மீட்க இயலுமோ? ஏனைய இதிகாச காப்பியங்களை உற்று நோக்கின் கதாநாயகனால் இயலாதகாரியம் ஒன்றுமே யில்லை. இராமன் தனக்குத் துணைவராயிருந்த வீரர்கள்செய்த காரியங்களைத் தானே செய்யச் சக்தியற்றவனாயிருந்தனனென்றாவது, அவர்கள் இல்லையாகில் இவனால் சீதையை மீட்கமுடியாதென்றாவது கூறக்கூடியகுறிப்புகளை வடமொழியிலாகிலும் தென்மொழியிலாகிலும் பாடிய கவிகள் காட்டவில்லை. அவ்வாறே கந்தனும், வீரவாகுமுதலிய துணைவர்செய்தகாரியங்களைத் தானே சாதிக்கவல்ல சக்தியுள்ளவனென்றே அப் பெருங் காப்பியம் வெளியிடுகின்றது. அதுவேபோல் தருமனும் பாரதத்தில் யாவும்செய்யக்கூடியவனென்னும் தகைமைபெற்றுஇருப்பானாயின் அந்தக் காப்பியத்தலைவன் தருமனே யென்றும் அவனன்றி வேறொருவனைக் கதாநாயகனென எண்ணலாகாது என்றும் வற்புறுத்திக் கூறலாம். இதன்றியும் தருமன் புறங்கொடுக்கா வீரனாயினும், தன் தம்பியரான வீமனையும் அருச்சுனனையும் போல்அத்துணைபராக்கிரமசாலியெனக் கூறக்கூடிய ஒளிஅவனுக்குப்பாரதத்தில் கிடைக்கவில்லை. பிராமணனாய்ப் பிறந்த துரோணன் க்ஷத்திரிய வொளியினில் காணப்படுவதுபோல், க்ஷத்திரியனான தருமன் பிராமணத் தன்மையில் காணப்படுவதுடன், விராடனுக்குப் புரோகிதத்தொழில் புரியத்தக்க தத்துவமுடைத்தாயிருந்தான். கதாநாயகராயமைந்துள்ள கந்தனும் இராமனும் கடவுட்டன்மையில்காணப்பட்டும், யோக குருவாயும், பிராமண வடிவாயும்திகழாமல், யாவராலும்வெல்லமுடியாத போர்வீரராகக் காணப்படுகின்றனர். இத்தன்மையே நமது பெருங் காப்பியங்களில் கதாநாயகராய் விளங்குகிற 'தன்னிகரில்லாத் தலைவரின்' தன்மை யாகும். கண்ணபிரான்பரமபதம்செல்லுங்காலத்தில்பார்த்தனது வில்வித்தையும் மாண்டது. அந்தக் கணமே தருமன் தனக்கு உலகஆட்சிதகாதெனப் பரீட்சித்துக்குப்பட்டங்கட்ட அஸ்தினாபுரத்தைவிட்டுத் தன் தம்பியருடனும் பாஞ்சாலியுடனும் இமயமலைக்குச் செல்லலாயினான். இவற்றையெல்லாம் கவனித்தே நமது சமயகுரவர்கள் பாரதசரிதையைப்பேசுங்கால் நர நாரண விசயத்தையே தேவாரத்தில் கூறினாரெனக் கொண்டோம்.

ஆயினும் பாரதக் கதையைக் கௌரவ பாண்டவ சரிதை யென்று எடுத்தே யான் இவ்விதிகாசக் கட்டுரைகளை எழுதலானேன். ஆதலால் பாரதத்தில் முக்கியமாய் விளங்குவது நரநாராயண விசயமாயினும், அவர்களைக் கதாநாயகர்கள் என்றாகிலும், அவர்தம் கதை பாரதமென்றாகிலும் யான் எழுதவில்லை. இவ்வாறே பாரதத்தில் நாரணன் சம்பந்தத்தையும் நரன் செய்தவைகளையும் நம்சமயகுரவர்கள் தேவாரத்தில் எடுத்துக்காட்டி, ஆங்கு நாரணன், பாரதப் போர்வீரரில் முதல்வனாய் நிற்கின்ற பார்த்தனுக்குப் பாசுபதம் இன்றியமையாததென்று முன்னரேகண்டுஉணர்த்தியதையும், அதற்கு உரிய ‡சிவபக்திசெய்த பார்த்தன் தவஞ் செய்ததையும்அத்தவத்தினது மேன்மையையும் தமிழ் மறைகள் விளக்கின. ஆகையினால், பாரத இதிகாசத்தில் அப்பரின்நோக்குச் செல்லுகின்றவழி ஈதென முன்கட்டுரைகளில் கூறப்பட்டதன்றி வேறு இல்லை. அத் தேவார ஆராய்ச்சிக் கட்டுரையில்காட்டவேண்டிய தகுதியுடையவை இவ்விஷயங்களேயாதல் பற்றி அவைகளை விட்டுவிட மனமின்றி அவற்றைக் காணலாயிற்று.

சென்றஆண்டு நான், அப்பரைச் சார்ந்து எழுதிய இதிகாசக் கட்டுரைகளில் வேறு அபிப்பிராயம்கொண்டதுபோல், திருவாளர் K. T. விஜயராகவாசாரியார் தமது "தருமன் மாண்பு" என்னுமக் கட்டுரையில் காட்டியதால் நான் இவைகளை இங்கு இவ்வாறு விவரிக்க நேர்ந்தது.

* மண்ணினை யுண்ட மாயன்
தன்னையோர் பாகங் கொண்டார்
பண்ணினைப் பாடி யாடும்
பக்தர்கள் சித்தங் கொண்டார்
கண்ணினை மூன்றுங் கொண்டார்
காஞ்சிமா நகர்த னுள்ளார்
எண்ணினை யெண்ண வைத்தார்
இலங்குமேற் றளிய னாரே.

—திருக்காஞ்சி திருமேற்றளி 7.

‡ "ஒன்றிய தவத்து மன்னி யுடையனா யுரோக காலம்
நின்றுதங் கழல்க ளேத்தும் நீள்சிலை விசய னுக்கு
வென்றிகொள் வேட னாகி விரும்பிவெங் கான கத்துச்
சென்றருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே"

திருச்சேறை—திருநேரிசை 8.

---

# நகைச்சுவை

[9-வது பக்கத் தொடர்ச்சி]

இடைக்காலத்தில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இயற்றிய இராமாயணமென்னும் பெருங் காப்பியத்திலும்இந்நகைச்சுவை பயின்றுவருமிடங்கள் பற்பல உண்டு. அசோகவனத்தில் இராவணனால் அனுப்பப்பட்ட அரக்கர்கள் பலரைப் போரினிடைக் கொன்ற அநுமனை இந்திரசித்துபிரமாஸ்திரத்தினாலே கட்டிவிட்டபின், அரக்கர் இராவணன்முன் இழுத்துச் சென்றார்கள். இராவணன் அநுமனைப் பார்த்து "நீ யார், எதற்காக இங்கு வந்தாய்?" என்ன வினவுதலும், அநுமன் "இராமனால் தென் திசைக்குச்சீதையைத்தேடும்பொருட்டு அனுப்பப்பட்ட தானைத்தலைவனும் வாலியின் மைந்தனுமான அங்கதன் தூதனாக நான் இங்குத் தனியே வந்தேன்" என அஞ்சாது பதிலிறுத்தான். அது கேட்டு, இராவணன் நகைசெய்து வாலியின் க்ஷேமத்தை உசாவுவானாய் "வாலி வலியன் கொல்; அவன் ஆசில் வாழ்க்கை நன்றுகொல்?" என்று அநுமனை வினவினான். இராவணன் ஒருகாலத்தில் வாலியின் வாலில் கட்டுண்டு தோல்வியுற்று அவமானம் அடைந்ததினால் உண்டாகிய அச்சக்குறிப்பு அவன்முகத்தில் தோன்றினதை நவவியாகரண பண்டிதனா மநுமன் உற்று நோக்கினான்.

ஒருவன், தன்னினும் வலிமிக்க ஒருவனிடமிருந்து வந்தவனிடம் வலியில் மிக்கவனைத் திருப்தி செய்வதற்காக அவனிடத்தில் மிக்க அன்புள்ளவன் போல நடித்துப்பேசும்தன்மை இராவணனிடம்தோன்றவே அநுமானுக்குப் புன்னகை யுண்டாயிற்று. இதைக் கம்பர் பின்வரும் அடிகளால் உணர்த்துகிறார்.

வன்திறலாயவாலிவலியன்கொலாசின்வாழ்க்கை
நன்றுகொலென்னலோடுநாயகன்றூதனக்கான்

இன்னணம் சிரித்த அநுமன், இராவணன் பயத்தைப் போக்குவதற்கு விரைந்தனன் என்னப் பதிலளித்த மொழிகளினுள் நகைச்சுவை ததும்புகின்றது.

“அஞ்சலையரக்கபார்விட்டந்தரமடைந்தானன்றே
வெஞ்சினவாலியீளான்வாலும்போய்விளிந்ததன்றே
அஞ்சனமேனியான்றனடிகளையொன்றான்மாழ்கித்
துஞ்சினனெங்கள்வேந்தன் சூரியன்றோன்றலென்
[றான்

வாலி உயிரோடிருந்தபொழுது விண்ணுலகிற்குச் சென்று தேவர்களுக்கு உதவிகள் செய்து பலமுறை திரும்பி வந்துளானாதலின் “பார்விட்டு அந்தரமடைந்தான்” என்ற கூற்றினின்று வாலி இறந்தானென்று கொள்ளாமல் மறுபடியும் திரும்பி வருவானேயென இராவணன் நினைத்தபொழுது அவன் முகத்தில்முன் தோன்றிய அவ்வச்சக்குறிப்புக்கள் நீங்கிற்றில. இதை உற்றுணர்ந்த அநுமன் அவன் கொண்ட அச்சத்தை மறுபடி நீக்குவதற்காகக் “கொடிய சினத்தையுடைய அவ்வாலி இம்முறை மீண்டு வரமாட்டான்” (மீளாத இயமனது உலகத்திற்குப் போய்விட்டான்) என்று கூறினன்.

இராவணனுக்கு மிக்க துன்பத்தை விளைவித்தது வாலியின் வாலேயாகும். வாலி, தன் காலைக்கடனைச் சமுத்திரக்கரையில் செய்துகொண்டிருந்தபொழுது, நெருங்கிய இராவணனை, வாலினால் கட்டித் தூக்கிச் சென்றானாதலால், இராவணன், வாலியினும் அவன் வாலுக்கே மிகுதியாக அஞ்சினன். அதனால், இறக்குந்தறுவாயில் வாலி அந்த வாலைமட்டும் யாரிடத்திலாவது ஒப்படைத்துஇருக்கலாமே, அதற்கு என்ன செய்வது என்று எண்ணிய அச்சக்குறிப்பு இராவணன் முகத்தில் மறுபடியும் தோன்றிற்று. அதை நீக்குவதற்காக “அவனுடையவாலும் அவனோடு சென்றழிந்தது” என்று அநுமன் கூறினன்.

இப்பாட்டின் முதல் இரண்டடிகட்கு நகைவிளைக்கும் குறிப்புப்பொருளில்லையேல் அவைகள் பயனில சொற்களாய் முடியும். “வாலும் போய் விளிந்தது” என்ற சொற்களைக் கேட்டவுடனே இராவணனுக்கு அச்சம் நீங்கி இனி உலகில் தன்னை வெல்வார் யாருமில்லை என்ற பெருமிதத்தால்வந்தவொரு செருக்கையடக்கவெண்ணி “நீவிரோதித்துக்கொண்ட அஞ்சன வண்ணனாகிய இராகவனது ஓர் அம்பினாலே அவன் மாண்டனன். வாலியின் தம்பி எங்களுக்கு அரசனாகி இராமன் சிநேகிதனானன்” என்று வாலியினும் அதிகமாக அஞ்சவேண்டியவன் இராமனே யென்ற குறிப்புத் தோன்ற பின்னிரண்டடிகளால் கூறினன்.

மேலே ஆராய்ந்த சங்கச்செய்யுள்கள்போலன்றி இப்பாடல்களில் தனி நகைச்சுவை பிரதானமாகப் பெய்திருத்தல் உற்று நோக்குவார்க்கு நன்கு விளங்கும். எனினும் இப்பாடல்களிலும் நகைச்சுவை நுட்பமாய் ஆராய்வோருக்கே புலப்படுதன்மையதாய் மிகக் குறிப்பாக அமைந்திருத்தல் காண்க.

பரணி பாடுவதில் புகழ்வாய்ந்த சயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணியிலும் நகைச்சுவை காணப்படும். ஆயினும், பேய்களை வருணிக்கும் பொழுது இளிவரற்சுவைக்கு அங்கமாகவும், கலிங்கர்சேனை கருணாகரன் சேனைக்குப்பயந்து ஓடியதைக்கூறும்பொழுது அச்சச்சுவைக்கு அங்கமாகவும், இந்த நகைச்சுவை உதவும்படியே பாடப்பட்டிருப்பதனால் அந்த நூலிலிருந்து சான்று காட்டவேண்டியது அத்துணை அவசியம் இல்லை. எனினும், பேய்கள் கலிங்கப்போர்க்களத்தில் விருந்துண்டதை வருணிக்கும் பாடல்களைப்போல் தனி நகைச்சுவை பொருந்தியவைகளும் சில உள. அவை விருந்து உண்ணை ஆரம்பிக்கும்பொழுது,

“நமக்கொரு வாயொடு வாய்மூன்றுந்
தாமினி நாப்படைத்துக் கொண்டு
நமக்கொரு வாய்தந்த நான்முகனார்
நாலும் படிகளித் துண்மீரே”

என்று பிரம்மனைப்பழித்ததும், விருந்துஉண்பதற்குப் போர்க்களத்திலே கிடந்தவைகளைக் கருவியாக உபயோகித்ததும், விருந்துண்டபின் பேய்கள் விளையாடியதும் தனிநகைச்சுவைததும்பும் பகுதிகளாகின்றன. இப்பாடல்களில் குறிப்பினாலன்றி நகைச்சுவை மிகத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் அமைந்திருப்பது, நகைச்சுவை இலக்கியம் சிறிது வளர்ச்சியடைவதைக் குறிக்கும்.

இருபதாவது நூற்றாண்டில் நம்மோடு வாழ்ந்து சமீபத்தில் காலஞ்சென்ற பாரதியாரின் காவியத்தில், இந்நகைச்சுவை யாரும் எளிதிலுணர்ந்து சுவைக்கும்படி அமைந்திருப்பது நன்கு விளங்கும். நகைச்சுவையுண்டாக்குதற்குப் பாரதியார் கையாளும் முறைகள் மிகவும் வியக்கத்தக்கனவாகவே யிருக்கின்றன. இவர் இயற்றிய செய்யுளிலக்கியத்தைப் பொறுத்தமட்டில் எடுத்துக்கொண்டாலும், நகைச்சுவை பயக்கும்படி பாரதியார் கையாள்கிற முறை பண்டைப்புலவர்கள் முறையினின்றும் வேறுபடுவது நன்கு விளங்கும்.

நகைச் சுவையைக் குறிப்பாகக் கொள்ளவைக்கும் பண்டையோர்வழக்கத்தை அறவேவிட்டு, உலகத்தில் எல்லோருங்கண்டறிந்த குரங்கின் தன்மையை உள்ளவாறேவருணித்துப் படிப்போருக்கு அடக்கமுடியாத நகைச்சுவையை,

“மேனியழகினிலும்விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே
வானரர்தம் சாதிக்கு மாந்தர் நிகராவாரோ”

என்ற அடிகளால் உண்டாக்குகிறார். இம்முறையே, காளையின் இயற்கைத் தன்மையையும்,

“நீள முகமும் நிமிர்ந்திருக்கும் கொம்புகளும்
பஞ்சுப் பொதிபோற் படர்ந்ததிரு வடிவும்
மிஞ்சு புறச்சுமையும் வீரத் திருவாலும்
வானத் திடிபோல மாவென் றுருமுவதும்”

என்ற அடிகளில் வருணிக்கிறார். குரங்குகளின் முகம்போலத் தங்கள்முகத்தினையும்மயிரில்லாமல் அழகாக வைத்திருப்பதற்கே, மனிதர் தம் முகத்தை க்ஷவரம் செய்துகொள்ளுகிறார் என்னப் பரிகசித்துக் கூறிய

மீசையையும்தாடியையும்விந்தைவானரர்தம்
ஆசைமுகத்தினைப்போலாக்கமுயன்றிடினும்

என்னும் அடிகளும், குரங்கின் வாலை மிகப்பெருமைபடுத்திக் கூறி, அந்த வாலை மனிதர்கள் தங்களுக்குச் செயற்கையில் ஆக்கிக்கொண்டாலும் இயற்கையிலே அமைந்த வாலுக்கு ஈடாகா தென்பதை

வேகமுறத் தாவுகையில் வீசியெழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ

என்று கூறிய அடிகளும், குரங்கு சாகபக்ஷிணியாக இருக்கும் தன்மையை

சைவ சுத்த போசனமும் சாதுரியப் பார்வைகளும்
வானரர்போற்சாதியொன்று மண்ணுலகின் மீதுள
[தோ



என்று கூறிய அடிகளும் மிகவும் வியக்கத் தக்கவை.

காளையினிடத்துக் குயில்பேசும் காதற்கதைமுழுதும் நகைச்சுவைப்பயப்பன; காளையைக் குயில் கூப்பிடும்பொழுது அவர் உபயோகித்துள சொற்களின் ஆற்றலும், காளையை நேசிப்பதற்குக் குயில் கற்பித்துக்கூறியகாரணமும் இப்பகுதியில்எல்லாவற்றினும் மிக்க நகைச் சுவையை விளைவிக்கின்றன.

“..........................நந்தியே
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்குங் காந்தமே
காமனே மாடாகக் காட்சிதரு மூர்த்தியே
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ
மானிடருந் தம்முள்ளே வலிமிகுந்த மைந்தர்தமை
மேனியுறுங் காளை யென்று மேம்பாடுறப்புகழ்வார்”

இப்படியே பலவிடங்களில் தமது வசனநூல்களிலும் பாரதியார் எல்லோரும் எளிதில்உணர்ந்து மகிழும்படி நகைச்சுவை ததும்ப இயற்றியிருக்கிறார்.

பொதுவாக இவர், பழைய நூல்களில் காணப்படுவதுபோல நகைச்சுவையைக் குறிப்பாகக் காட்டாமல் வெளிப்படையாக உணரும்படி அமைப்பதற்கு முக்கியமாகக் கையாளும் முறை, இயற்கையை அப்படியே யெடுத்துக் கூறுவதேயாகும். குயில் பாட்டில், குயில் என்ற குறத்தி சேரதேசத்து இளவரசனோடு கூடியிருந்த அநியாயச்செயலை குரங்கன் என்னும்ஓர் குறவன்கண்டுபேசும்பொழுது, குறவர்கள் பேசுவது போலவே,

“பட்டப் பகலிலே பாவிமகள் செய்தியைப்பார்
கண்ணாலங் கூடஇன்னுங் கட்டி முடியவில்லை
மண்ணாக்கிவிட்டாள் என்மானந் தொலைத்துவிட்டா
நிச்சய தாம்பூலம் நிலையா நடந்திருக்கப் [ள்
பிச்சைச் சிறுக்கிசெய்த பேதகத்தைப் பார்த்தாயோ”

எனப்பாடிய அடிகள் இதை இன்னும் வலியுறுத்தப் போதிய சான்றாகும்.

ஏனைய சுவைகள் நன்றாக விளங்கித் தோன்றும் முற்காலத்திய நம் தமிழ்க் காவியங்களில், உண்டோ இல்லையோ என்று ஐயுறும்படி, ஏனைய சுவைகளுக்கு அங்கமாக, மிக நுட்பமாகக் குறிப்பினால் உணரக்கிடந்த நகைச்சுவை, இடைக்காலத்தில் சிறிதுசிறிதாக விருத்தியடைந்து, தற்பொழுது பாரதியார் பாடல்களில் நகையும் பிறசுவைகளைப் போன்று இலக்கியத்திற்கு அணிசெய்து, இன்றியமையாத ஓர் சுவையாக வெளிப்பட்டு விளங்குகின்றது. பாரதியாரையே பின்பற்றி இந்தச்சுவையும் ஏனைய சுவைகளோடொக்கப் பாராட்டப்பட்டு, உரைநூல்களும் செய்யுள்களும் பத்திரிகைகளும் வெளிவருமானால், தமிழிலக்கியம், ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளின் இலக்கியங்கள் போன்று, பலரால் விரும்பிக் கற்கப்பட்டு மேன்மையடையுமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

---

# சூளாமணி

இரத நூபுரச் சருக்கம்

[7-வது வால்யூம், 782-வது பக்கத் தொடர்ச்சி]

48. திருமங்கையாழ்வார் திருவெள்ளறைக்குச் செல்கின்றார். இறைவன் இன்பம் எங்கும் வழிகிறது இனியதோர் இளங் குயில் மாம்பொழிலில் தளிர்களைத் தின்கின்றது. பகழப்பழகப் பாலும்புளிக்குமன்றோ! தான் மிக விரும்பிய மாந்தளிரை விட்டோடித் தித்திக்கும் கனியையும் தேனையும் கண்டறிந்து உண்ணச் செல்கிறது. இறைவன் இன்பமானது எங்குமாய் நிறைந்து நமக்கு இன்பமூட்டி இன்னருள் சுரக்கும் வகைஇதுதான் எனக் காட்டி அதனில் திளைக்கின்ற திருமங்கைமன்னர்,

மாம்பொழில் தளிர்கோதிய மடக்குயில்
வாயது துவர்ப்பெய்த
தீம்பலங்கனி தேனது நுகர்திரு
வெள்ளறை நின்றானே.

எனப் பாடுகின்றார். இக் கடவுட்காட்சியைக் காண்கிறார் தேவர். அறவாழியந்தணனை வழிபடும் இவரை இக்காட்சி அறவுலகிற் கொண்டுசென்று அறமொன்றினை வற்புறுத்துகின்றது. மாந்தளிர்களை மூக்கின் அலகால் கொந்தித்தின்ற சிறுகுயிலுக் கது துவர்க்கின்றது. இளவேனிற்காலம் தொடங்கியபோது தளிர்க்கின்ற இம்மரங்கள், பின்னே தளிர் முற்றுமாதலின் துவர்ப்பது இயல்புதானே. இதற்குள் பூக்கள்பூத்து விளங்குகின்றன. சிறுபறவை யாதலின் தொலைவில் பறந்துசெல்லவோ இயலாது. எங்கும் இன்பவெள்ளம் புரள்கின்ற இவ்விளவேனிற் காலத்தே பறந்தும் செல்லவேண்டுமோ; அதனருகிலேயே முருக்கம்பூக்கள் செக்கச்சிவந்து கண்ணைக் கவர்கின்றன. அப்பூக்கள் இணைகள்நிறையமலர்ந்துதிகழ்கின்றன. அம்முருக்கம்பொழிலினுள்ள இத்தகைய மரக்கிளைகள் மாம்பொழிலில்வாழும்சிறுகுயிலினருகே நீண்டுகிடக்கின்றனகுந்திய இடத்தினின்றே அந்தப்பூவைக்கறிக்கின்றது இச் சிறுகுயில். அப் பூவினுள்ளே பெருக்கெடுக்கும் பூங்கள்ளை வாயாரக் குடித்துமகிழ்கிறது. தேன்வழிய வழிய அவ்வின்பத்துக்கு ஒரு போக்குவீடாக, இன்சுவை பொங்கிவழியப் பாடலாகின்றது. மாந்தளிரின் நல்ல பெருவளம் மாறாமல் நின்றாலும் இன்சுவைப் பண்பு மாறியபின் அதனை அங்குப்பிறந்தசிறியதொரு குயிலும் நாடவில்லையல்லவா! அஃதேபோலஇவ்வுலகிலே அளவிலாச்செல்வம்படைத்தவரையும் அவர்களிடம் இன்சொல் ஈகை முதலிய இன்சுவைப்பண்புகள் உள்ளபோதுதான் எவ்வெவரும்அமர்ந்துவாழ்வர். அப்பண்புகள் இல்லையானால் அவர்களைச் சார்பவர் இல்லையே இவ்வுலகில். இவ்வாறு வேற்றுப்பொருள் வைப்பணிகொண்டு அறவழி கூட்டுகின்றார் தேவர். பெரும் புலவர்கள் தத்தம்நோக்கத்திற்கேற்றவொரு காட்சியே கடவுட் காட்சியாகவும் அறக்காட்சியாகவும் மாறுதல் காண்க. திருமங்கைமன்னர்பாடலையே புனைந்துரைத்துப்புதுச்சுவையூட்டுகின்றதேவர் திறம் பாராட்டத் தக்கதன்றோ! மங்கை மன்னர் மக்களையும் பறவையையும் ஒன்றாகக் காணும் கடவுட்காட்சியால் வாய் என்றார்; தேவரோ அதனைத் தெளிவாகப பறவைஎனச்சுட்டத் துண்டம்என்கிறார்! இன்சுவை மகிழ்ந்த கோதுதலைப் பாடினார் மன்னர்! துவர்ப்பெடுக்கத் தொடங்கிய நிலையில் அதைப் பன்முறை கொந்திக்கொந்திக் கடைநிலையைத்தேவர் கண்டு அக்கறித்தலைப் பாடுகின்றார். தீம்பலங்கனித் தேன் அகப்பட்டது திருமங்கை[illegible] “இனியபழம்

போல இனிமை கனிந்த தேன்'' என்னவும் மன்னர் பாடல் பொருள்படும். ஆதலின் தேவர் குயிலுக்குப் பூக்கள்ளே வாயார மாந்தக்கிட்டுகிறது. மன்னர்குயிலிந்தப் பொருள்களை நுகரப் பலவிடமும் சென்றிருத்தல் வேண்டும். தேவரது குயிலோ இருந்த இடத்திலிருந்தே மருங்கு நீண்ட பூஞ்சினைப் பூக்கள்ளை வாயார மாந்துகின்றது. மடக்குயில் எனப் பாடினுர் மன்னர்; மடக்குயிலோ மிகச் சிறிய குயிலாதலின், தேவர் சிறுகுயில் வெளியே பறந்து செல்லமாட்டாமல் இருந்த இடத்திருந்தே இன்பம் நுகர்கிறது. நுகர்தலைக் கண்டார் மன்னர், கடவுளிடையே விழுந்தார்; தேவர் நுகர்தலைக் கண்டு அறவுலகிற் புகுகையில் அக்குயில் பாட அதைக் கேட்டுக்கொண்டே மேலெழுகின்ருர். குயிலின்பாடல் இனிப்பதேன் என்பதையும் தற்குறிப்பேற்றமாக அழகுபெறப் புனைந்துரைக்கிருர் தேவர்.

49. பொழில்களினருகே செல்கின்ருேம். எங்கும் இன்னொலி புலம்பொலியாகக் கேட்கின்றது. ஈதென்னே; ஈதோ ஒரு குரவமரம் ஒன்றுதோன்றுகிறது. இதனைத் தம் மகளே எனத்தழுவி நிற்கின்றன இப் பொழில்கள். இக் குராப் பெண் அழகியதொரு நீலமணி மாலை அணிந்துள்ளாள்; அம்மாலை இன்னிசைபாடும் மாலையாகவும் விளங்குகின்றது. இசையோடெழுந்து மலரூதும் வண்டுகள் கோவைமாலையாகக் குராமரத்தே மொய்த்துநிற்கின்றன. இதன் பூவைப் பார்த்தீர்களா? சிறிய பெண்ணைபோல் செதுக்கப்பட்ட பாவை [illegible]ாகத் திகழ்கின்றன. குராப்பெண் இப்பாவைகளைக் கொண்டு விளையாடித் தன் இளமையைக் கழிக்கின்ருள். இவ் விளவேனிற்காலத்தில் எங்கும் எவற்றிற்கும் இன்பமூட்டும் வேனிலான் இங்கும் வந்து பயில்கின்ருன். இக் குராப்பாவையின் ஆவியை (உயிர் + மணம்) மிகவிரும்பித் துய்கின்ருன். காண்கின்றனர் இக்காட்சியைப் பெற்ருேராகிய பொழில்கள். "இளமையிலேயே இக்காதல் எழுகின்றதே; விட்டு நீங்கிலோ? வேனிலான் இவளைக் கைவிட்டாலோ! ஆவி நீங்கும் அன்ருே!'' என்று அஞ்சிப் புலம்புகின்ற புலம்பலே நாம் கேட்கின்றஒலி. பூவையின் ஒலி; கிளியின் ஒலி என்னக் கூறுகின்றீர்களோ! ஆம் ஒரு பொழில் பூவையின் ஒலிகொண்டு புலம்புகின்றது; மற்ருெரு பொழில் கிளியின் ஒலிகொண்டு புலம்புகின்றது.

50. இன்னவாறு இளவேனிற்கால வருகையைப் புனைந்துரைத்து மன்னன் மனங்கொள்ள உணர்த்துகிருள் வயந்தநிலகை. கேட்கின்ருன் அரசன். அங்கே செல்லவேண்டுமென விழைகின்ருன். இவனது அன்போ, மனைவியாகவும் மக்களாகவும் வளர்ந்திருத்தலினுல்தான்பெற்ற இன்ப மவர்களும்பெறுக என்னத் தன் மக்களோடும் உயர்ந்த தன்னுரிமையாம் மனைவியோடும் மெய்காப்பாளரோடும், மெல்லியதலையுடைய யானைமீதும் தேரின்மீதும், சிவிகைமீதும் ஏறிவருகிருன்! நகரை நீங்குகின்றனன். மனோவனம் என்னும் இந்த இளமரக்காவை நண்ணுகிருன். ஆண்மகனின் உரிமையனைத்தும் அவன்மனைவியால் வரும் எனச் சுட்ட அவளை உரிமை என்கின்ருர் தோலாமொழித் தேவர்.

---

# வில்லி பாரதம்

## இராசர்ராசன்—துரியோதனன்

[10-வது பக்கத் தொடர்ச்சி]

ஆதலின் மிகச்சிறந்த நுண்ணிய கவிதைச்சுவையுடன் இயற்றப்பட்ட இச்சருக்கத்தைக் கொண்டே சுயோதனனது பண்பினை எளிதில் ஆராய்ந்து காட்டலாமென்றெண்ணியே இப்பகுதியை யான் எடுத்துக் கொண்டேன். சிறந்த நாடகக் குறிப்புடன் அமைந்திருத்தலின், இக்காட்சியைப் படித்தமாத்திரத்தில் துரியோதனனது உருவம் நமது அகக்கண் முன்னே திகழும். ஆனல் பார்வையளவில் ஒருவனதுபண்பினை நேர்மையாக நிச்சயித்தல் இயலாது; அதனேடு அவனது செய்கைகளையும் நீரக் கேட்டபின் முடிவு செய்தல் வேண்டும். ஆதலின், இச்சருக்கத்தில் அவனை நேரில் கண்டு குறிப்பெடுத்துக்கொண்டு, பின் அவன் செய்கின்ற செய்கைகளையும் வில்லிபுத்தூரர் வாயிலாக உணர்ந்து அவனது பண்பினை நிச்சயிப்போம். மேலே கண்ணன் கூறுகிருர்—

அரவ மல்கிய பதாகை யாய்மதி
யமைச்ச ராயரச ழிப்பினும்
குரவர் நல்லுரை மறுப்பி னும்பிறர்
புரிந்த நன்றியது கோல்லினும்
ஒருவர் வாழ்மனை யிலுண்டு பின்னுமவ
ரவருட னழன்றுபொர வுன்னினும்
இரவி யுள்ளள வும்மதிய முள்ளளவும்
இவர்க ளேநரகி லெய்துவார்

இவ்வாறு ஒருவனரயும் நேர்முகமாகக்குறிப்பிடாமல் மறைமுகமாக, சகுனி கர்ணன் முதலியவர்களுடன் தன்னையுந் தாக்கிச் சொல்கின்ருன்என்பதைக் கண்ட சுயோதனன் கண்ணனைத் தடுத்துச் சில கூறுகிருன். இவ்விருவருக்கும் சொற்போர் நிகழ்கின்றது. ஒருவரையொருவர் வாக்கிலேயே வெல்ல முனைகின்றனர். ஒருவரை யொருவர் அதிகம் வாய்விடாமல் பார்த்துக்கொள்கின்றனர். சாகசம், தந்திரம், கம்பீரம், அழகு, எதையும் வெல்லவல்லஆற்றல், வாக்குத்திறமை, வெளியடக்கம் முதலியவைகள் அனைத்தும் இனிது அடங்கிய இந்தப்பாக்களை அப்படியே பாடி இன்பம் துய்த்தல் வேண்டும். $

சீத நாண்மலர் மடந்தை கேள்வனி
வைசெப்ப வுந்தெரிய வொப்பிலா
நாத நாயகன் முகத்தின் வைத்தவிரு
நயன ஞகிமிக நகைசெயாத்
தூத ஞகிவரு தன்மை கூறுகென
மன்னர் மன்னனிது சொன்னபின்
வேத நாறுமல ருந்திவண் டௌப
விரைசெய் தாரவனு முரைசெய்வான்.

இவ்வரசனைப் பாருங்கள். விழிப்போக்கிலேயே கருத்தினைப் பிறருக்கு அறிவுறுத்தி ஆட்கொள்ளும் இவனது வழக்கம்இவனை இப்பொழுதும்தொடர்வதைப்பார்மின். அந்நகையோவெனின் பொருளில்லா அரசநகை; அல்லது தனக்கு விரோதமாக அமைந்த மொழிகளுக்கெதிர்ப்பான செருக்குநகை; எப்படியேனும் கொள்க.

துரியோதனன் இப்படிக் கூறியதற்குக் கண்ணன் பின்வருமாறு கூறுவார்.

சூதி னலா சிழந்து நின்றுணைவர்
சொன்னசொல்லும்வழு வாதுபோய்
ஏதி லார்களெ னநொந்து தண்ணிழல்
இழந்து கானிடை யெய்தியும்
நீதி லாவகை குறித்த நாள்பல
கழித்து வந்தனர் செகத்தினில்
கோதி லாதகு ருகுல மகீபவ
வுருரிமை நண்பொடு கொடுத்தியே.
சொல்ல வாவுர கதுவச நின்னுரிய
துணைவர் தங்களை யழைத்துநீ
வல்ல வாறுசி லநாடளித் தவர்கள்
தம்முடன் கெழுமி வாழ்தியேல்
நல்ல வாய்மைநிலை யுடையையென் றரசர்
நாடொறும் புகழ்வர் வன்புகொண்
டல்ல வாமென மறுத்தியே றைமும்
ஆண்மை யும்புகழு மல்லவே.

இதைக் காட்டிலும் சிறந்ததொரு உருக்கமான உரைசெய்தல் இந்நூற்றுண்டில் மிகத்தேர்ந்த அரசியல் வாதிகளுக்கும் அரிதாமென்பது மிகையாகாது. ஆயினும் சிறந்தஅரசியல் சொற்பொழிவுகள் பயனிலாமல் மடிதல் போலவே சுயோதனனிடத்துக் கண்ணன் சொற்கள் யாதும் பயன்படாவாயின. அவன் மறுமொழி கூறுவான்,

அன்று சூதுபொ ருதுரிமை யரசையும்
இழந்து போயினர் களைவரும்
இன்று மீவிர கின்மீள வுங்கவர
வெண்ணில் யானவரி னெளியனே
சென்று கானிடை இன்ன முந்திரிதல்
உறுதி

என்றுசிறினுய் மேலும் தொடரநினைத்தவன், சட்டென்று நிறுத்தி, தனது அநியாயத்தைப் பரக்கப் பேசாமல் சுருக்கமாக வெளியிட்டாற்ருன் தன் அக்கிரமத்திற்கே பழக்கப்பட்டிருக்கும் அச் சபையோரது நெஞ்சில் தன்கொடுமை நெடுநேரம் தங்காதென்பதை நினைத்து,

நீவெ றுக்கிலெ னிருந்த மன்னவர்
திகைக்கி லென்பல நினைக்கிலென்
போய்ந கைக்கிலெ னுரைத்த வுண்மைமொழி
பொய்த்த தென்றமரர் புகலிலென்
ஈயி ருக்குமிட மெனினு மிப்புவியில்
யான வர்க்கரசி னிக்கொடேன்

என்று தன் துணிவைச்சுருக்கமாகக் கூறிவிட்டான். மிகப்பெரியதுணிபுகளெல்லாம் சுருக்கமாக அமைவதன்ருே அரசியல் இலக்கணம்.

$ஆயினும் ஒன்று. இப்பாக்களைச்சீர்பாகுபாட்டின்படிப் பாடுதல் நன்றன்று. எனெனின், அரசனது கொலுவில் முதலில் தோன்றிய மிடுக்கும் முடுக்கும்இப்போது தளர்வடைந்துநிகழ்ச்சிகள் சிறிது இயற்கையொழுக்காய்ச் செல்லுவது போலவே பாக்களும் 'சீர்தளர்ந்து இருக்கின்றன' என்றே கூறலாம். உதாரணமாகர் முதல் பாட்டில்,

முட்ட நித்தில நிரைத்த பந்தரின்
நகைத்த சீரரி முகத்தகால்
பட்ட வர்த்தனரும் மகுட வர்த்தனரும்
வந்து சேவடி பணிந்தபின்

எனும்அடிகளில் சீர்கள், சொற்களைத் துணிக்கவேண்டியிராமல், எத்துணை ஒழுங்காயமைந்துள்ளன? ஆனல்இதே சந்தத்தில் வரும் வேருெர் பாட்டினை அலகிடுவோம்.

கார்வ பூங்குறு மெனச்சி னத்திறே
டுகண்ணி லான்மதலை கழறவும்
பார்வ பூங்கதி னைவில் லையேல
வனிபா தியாயினு வழங்குவாய்

என்று அமைந்துள்ள இவ்வடிகளை அலகிடுவதற்குச்சொற்களை எவ்வளவு சேதிக்கவேண்டி வருகின்றது.



---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—9. கார்காலப் படலம்

[7-வது பக்கத் தொடர்ச்சி]

அரசின் நினைவை யழைத்தா னல்லன்

இன்னமும், சில இம் மின்னலிற் கண்டுரைக்க வல்லவர் கம்பர். வேசைகளின் திறத்தில் சிரிக்கும் ஆசைகளை நினைத்தவாங்கே, கற்பியல் மடந்தையர் திறத்து இம்மின்னல் என்னும் என்னும் எண்ணம் இவர்மனத்தின்கண் எழுகின்றது. அவ்வளவில்,

பிரிந்துறை மகளிரும் பிலத்த பாந்தளும்
எரிந்துயிர் நடுங்கிட விரவி யின்கதிர்
அரிந்தன வாமென வசனி நாவென
விரிந்தன திசைதொறு மிசையின் மின்னெலாம்

[ஆகாயத்தின்கண் எல்லாத்திக்குக்களிலும் வீசிய மின்னல்கள்எல்லாம், கணவரைப்பிரிந்திருக்கிற மாதர்களும், பிலங்களில்உள்ள பாம்புகளும், தவித்துஉயர்நடுங்கும்படி, சூரியனது கிரணங்களை அறுத்துத் தள்ளுவனபோலவும், இடிகளின் நாக்குக்களைப் போலவும், தோன்றின]

என்னலானுர். தம் உயிரினும் இனிய மனைவியரை, இன்றியமையாவகை விட்டுப்பிரிய நேர்கின்ற கணவர், தாம் மீளுங்காலத்தின் குறிப்புடைய பருவமாய்க் கார்காலத்தையே தந்து செல்வாராதலின், அதுகாறும் ஆற்றமாட்டா அப்பிரிவை ஒருவாறு ஆற்றியிருந்த தலைவியர் இனிக் கார்காலம் வந்தும் கணவர் வாராமையின், எரிந்துயிர் நடுங்கிடும் நீர்மையராகின்றார். "மின்னலோ மின்னியும், இன்னும் நம் வாயிலின்கண், சென்ற நம் காதலர் வருகின்ற தேரின் இடியொலி கேட்கவில்லையே'' என்று வருந்துவார் இம்மாதராயின், பிலத்திலுள் கிடக்கும் அப் பாந்தளானது, "மின்னலோ மின்னிவிட்டது, இனி இடியும் இடித்துவிடுமே'' என்றஞ்சி நடுங்குகின்றது. ஒன்றன் விளைவை வேண்டுவார் ஒருதிறத்தார், அதனையே வேண்டார் மறுதிறத்தார்; இன்னவாறு இரு கூறுடைத்து இவ்வுலகு.

இனி மழைக்காற்று வீசுகின்றது. அக்காற்ருனது கற்புடை மகளிரினின்று கம்பர் மனத்தை மீண்டும் வேசையர் நினைவினுள் கொண்டு சேர்த்தாலென்ன,

தலைமையுங் கீழ்மையுந் தவிர்த லின்றியே
மலையினு மரத்தினு மற்று முற்றினும்
விலைநினைந் துளவழி விலங்கும் வேசையர்
உலைவுறு மனமென வுலாய தூதையே

[மேலோராயினும் கீழோராயினும் யாரையும் தவிர்க்காமல், யாராயிருப்பினும், தனக்கு விலையாகக் கிடைக்க

வேண்டிய பொருளையே நினைத்து அப்பொருள் உள்ளவரிடத்துக் குறுக்கே குறுக்கே ஒதுங்கிஅடையும்வேசையர்களாதுசுழல்கின்ற மனத்தைப்போலமழைக்காற்று மேலான மலைகளிலும் கீழுள்ள மரங்களிலும் எல்லாவிடத்தும் வீசியது.]

என்னப் புகல்கின்றார். வேசில் ஆசைகள் சிரிக்கின்ற சித்திரத்திற்கு, அவ்வேசையர் பக்கவாட்டத்திலே ஒதுங்கி ஒதுங்கிவந்து ஆடவர்களைச் சார்கின்ற இச் சித்திரம், 'இரண்டாம் பாகம்' ஆகி நனிமிகப் பொருந்தும்.

மின்னலும் இடியும் ஊதையும் வாடையும் விரவிச் செறிந்த அப்பருவத்தே,

இன்னகைச் சனகியைப் பிரிந்த வேந்தன்மேல்
மன்மதன் மலர்க்கணை வழங்கி ஞெனைப்
பொன்னெடுங் குன்றின்மேற் பொழிந்த தாரைகள்
மின்னெடுந் துவன்றின மேக ராசியே.

[இனியபுன்சிரிப்புடைய சீதையைப்பிரிந்திருந்த இராமன்மேல் மன்மதன் தன்புஷ்பபாணங்களை எய்வதுபோல, மின்னலுடன் நெருங்கிய மேகக்கூட்டங்கள், அழகிய பெரிய மலையின்மேல் மழைத்தாரைகளைச் சொரிந்தன.]

மன்மதன் மலர்க்கணை என்ன வீழ்ந்த அத்தாரைகள்,வானவர்உதிர்க்கும் மலரின் மாரியாகக் கம்பர் தம் கண்களின்முன் விரைவின் மாறவே,

தீர்த்தனுங் கவிகளுஞ் செறிந்து நம்பகை
பேர்த்தன ரினியெனப் பேசி வானவர்
ஆர்த்தென வார்த்தன மேக மாய்மலர்
தூர்த்தன வொத்தன துள்ளி வெள்ளமே.

[பரிசுத்தனான இராமனுங் குரங்குகளும் சேர்ந்து நம் பகைவர்களாகிய அரக்கரை அழித்துவிட்டனர், என்று தம்முள் பேசிக்கொண்டு தேவர்கள் ஆரவாரஞ்செய்வது போல, மேகங்கள் ஆரவாரஞ்செய்தன. மழைத்துளிவெள்ளமானது, தேர்ந்தமலர்களைச் சொரிவதுபோன்று இருந்தது.]

எனப்பாடலாகின்றார். தேவராது இடுக்கண் தீர்கின்றதெனினும் அதன்பொருட்டுச் சீதாபிராட்டி படுகிற துயரோ மறத்தற் பாலதன்று; ஆதலின்,

வண்ணவிற் கரதலத் தரக்கன் வாளினன்
விண்ணிடைக் கடிதுகொண் டேகும் வேளையிற்
பெண்ணினுக் கருங்கல மனைய பெய்வளை
கண்ணெனப் பொழிந்தது கால மாரியே

[அழகிய வில்லையேந்திய அரக்கனாகிய இராவணன், வாளாயுதத்தை உடையவனாய், ஆகாயத்தில் வேகமாகப் போன பொழுது, பெண்களுக்கு அணிகலம் போன்றவளும் வளையல்களை அணிந்தவளுமாகிய சீதையின்கண்கள் வெள்ளமாக நீர் சொரிந்ததுபோல,மேகம் கார்காலமழை பொழிந்தது]

என்ன அந்தச் சீதாபிராட்டியின் நிலையையும்நினைவு செய்துகொள்கின்றார். மனைவியைப் பிரிந்து வருந்துகின்றவன் இராமன் ஒருவனேயல்லன்;பின்னும்எத்தனையோபலர் உலகின்கண் அவ்வப்போது உளராதலின், கம்பர், மீண்டும் அன்னவர்களை நினைத்து,

சிரஞ்சுடர் மதிபுனை தேவன் விண்டொடர்
புரஞ்சுட விடுசரம் புரைய மின்னினம்
அரஞ்சுடப் பொறிகிமி ரயிலி னுடவர்
உரஞ்சுட வுளைந்தன பிரிந்து ளோர்க்கெலாம்

[தன் முடியில் பிரகாசிக்கின்ற சந்திரனைத் தரித்த கடவுளாகிய சிவபிரான் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற திரிபுரங்களை எரித்தல்பொருட்டு எய்த அம்பையொத்த மின்னல்கள், அராவப்பட்டு ஒளிவீசுகின்ற வேலாயுதங்கள்போல, தாம் திரும்புவதற்குக் கார்காலத்தை அறிகுறியாகவைத்துப் பிரிந்துபோயிருக்கின்ற ஆடவர்களினுடைய நெஞ்சைத் தகிக்க, அந்நெஞ்சம் வருந்தின]

என்றும்,

பொருடரப் போயினர்ப் பிரிந்த பொய்யுடற்
குருடரு தேர்மிசை யுயிர்கொண் டுய்த்தலான்
மருடரு பிரிவினோய் மாசுணங் கெடக்
கருடனைப் பொருவின கால மாரியே

[பொருள் ஈட்டும்பொருட்டுப் போயிருக்கின்ற தலைவரைப் பிரிந்த மனைவியரது வெற்றுடம்பிற்கு, உருள்கின்ற தேர்களின்மேல், பிரிந்த தலைவர்களாகிய தம் உயிர்களைக் கொண்டுவந்து சேர்த்தலால், கார்காலமழைகள், மயக்கத்தைச்செய்கின்ற,தலைவியரதுபிரிவுத்துன்பங்களாகிய பாம்புகள் அழியும்படி வந்த கருடனை ஒத்தன.]

என்றும் வருணித்து,அதன்பின்னர் இம்மழையினால் நிகழ்ந்தவைகளைச் சொல்லத் துவக்கும்போது,

விழையுறு பொருடரப் பிரிந்த வேந்தர்வந்
துழையுற வுயிருற வுயிர்க்கு மாதரின்
மழையுற மாமுக மலர்ந்து தோன்றின
குழையுறப் பொலிந்தன வுலவைக் கொம்பெலாம்

[யாவராலும் விரும்பப்படுகின்ற செல்வத்தை ஈட்டி வரும்படி பிரிந்துசென்ற தலைவர் வந்து தம்மிடம்சேரவும், முன் உயிர் நீங்கியிருந்த உடம்பில் உயிர் பொருந்தி மூச்சுவிடுகின்றமகளிர்போல உலர்ந்துகிடந்த மரங்களின்கிளைகளெல்லாம், மழை பெய்தவுடனே, தளிர்கள் பொலிந்து விளங்கி, அழகிய முகம் மலர்ந்து தோன்றின]

என்னக் கம்பர் இனிமையுற இயம்புகின்றார். இன்னணம் கார்கால நிகழ்ச்சிகளை வருணிக்கின்ற செய்யுள்கள் இனிமையுந் தண்மையும் தோன்ற பாடப்பெற்றிருக்கின்றன. மாதர்கைகளுக்கு நிகராக உவமிக்கப் படுகின்ற செங்காந்தள் மலர்களின் மீது பொன்னிறமான கொன்றை மலர்களும் செந்நிறமான மாணிக்கம்போன்றதம்பலப்பூச்சிகளும் படிந்திருக்குந்தோற்றமானது, இனிய இசைபாடுகின்ற வண்டுகளுக்குப் பூமிதேவி, பொன்னும் இரத்தினமும் பரிசிலாகத் தன் கைகளால் எடுத்துத் தருவது போன்றதென்று,

நன்னெடுங்காந்தட்போதினைவிரிகடுக்கைமென்பூத்
துன்னியகோபத்தோடுந்தோன்றியதோற்றந்தும்பி
இன்னிசைமுரல்வநோக்கியிருநிலமலர்க்கையேந்திப்
பொன்னொடுங்காசையீட்டிக்கொடுப்பதேபோன்றதன்

என்ன அழகுறஅமைத்தகாட்சி மனதிற்கு அமைதி நனி தரவல்லது.தேனீக்கள் அங்கங்குச்சென்று தேன் சேகரிக்குஞ் செவ்வியை,

சாத நாண்மலரி யாவையுங் குடைந்தன தடவிச்
சூத நூறெரி விடரெனத் தேன்கொண்டு தொகுப்ப
பாத நூன்முறை நாடகம் பயனுறப் பகுப்பான்
இரத மீட்டுறுங் கவிஞரைப் பொருவின தேனீ

[சிற்றின்ப நூல்களை ஆராய்ந்தறிந்த காமுகரைப்போல, தேன் பொருந்திய புதியமலர்கள் தோறும்நுளைத்துத் தடவி, அவற்றினின்று தேன்கொண்டு சேர்ப்பனவாகிய தேனீக்கள், பரதசஸ்திரமுறைப்படி, ஒரு நாடகத்தைக் காண்போர் அதன் பயனை அடையுமாறு பகுபாடு செய்வதற்கு இரஸங்களைச் சேர்க்கின்ற கவிஞரை ஒத்தன]

என்றனர். மான்களோவெனின் அவை,

நோக்கி னனைய நோக்கழி கண்டதுண் மருங்குற்
றூக்க ணங்கருஞ் சீதைக்குத் தாக்கருந் துன்ப
மாக்கி னனம துருவினென் றரும்பெற லுவகை
வாக்கி னுனரை யாமெனக் களித்தன மான்கள்



[தன் பார்வை அழகினால், நம் பார்வையழகு கெடும்படி செய்து வெற்றிகொண்ட, நுண்ணிய இடையையுடைய மோகினிபோன்ற அருமையான சீதைக்கு, தாங்குதற்கரியதுன்பத்தை மாரீசனாகிய அரக்கன் நம்முடைய உருவத்தைக்கொண்டு ஆக்கினான், என்பதால் நமக்கு உண்டாகின்ற பெறுவதற்கரிய மகிழ்ச்சியை வாயினால் பேசமாட்டாதவர்களாயிருக்கின்றோம், என்று மான்கள் குரல்காட்டாமல் துள்ளிவிளையாடிக் களித்தன]

மயில்கள் தோகை விரித்தாடுவதைக் கம்பர் இவ்வாறு வருணிப்பார்—

தேனவாமலர்த்திசைமுகன்முதலினர்தெளிந்தோர்
ஞான நாயக னவையுற நோக்கின நல்கக்
கானம் யாவையும் பரப்பிய கண்ணெனச் சனகன்
மானை நாடிநின் றழைப்பன போன்றன மஞ்ஞை

[மயில்கள், தேன் சொரியும் தாமரையை ஆதனமாக உடைய பிரமன் முதலிய அறிவாளிகளுக்குஎல்லாம் ஞான நாயகனாகிய இராமன் துன்பப்படுவதைப் பார்த்து, சீதையைத் தேடிக்கொணர்ந்து அவனிடத்துச் சேர்க்கும்பொருட்டு, கானகம் முழுவதும் பரப்பிய கண்களைப்போலத் தம் தோகைக்கண்களைப்பரப்பி, ஜானகியை எங்குந்தேடி அழைப்பன போன்று கூவின]

குயில்களோ வென்னின்,

நீயி ரன்னவர் குதலைய ராதலி னேடிப்
போய தையலைத் தருதிரென் றிராகவன் புகலத்
தேய மெங்கணுந் திரிந்தன போந்திடை தேடிக்
கூயவாய்க்குரல்குறைந்தபோற்குறைந்தனகுயில்கள்

["நீங்கள் அந்தச் சீதையினுடைய குதலையைப்போன்று பேசுகின்ற குரலையுடையவர்கள்ஆதலால், பிரிந்துபோன அவளைத் தேடிக்கொடுக்கக்கடவீர்" என்று இராமன் கூற அதற்கிணங்கி, தேசம் முழுவதும்சென்றுஅங்கங்குத்தேடி உரக்கக்கூவிஅழைத்துக் குரல் அடங்கிப்போனகுயில்கள் கார்காலத்தில் கூவாமலிருந்தன.]

இங்ஙனம் தனித்தனி கார்காலநிகழ்ச்சிகளை எடுத்துரைக்கும் செய்யுள்கள் பல. வான்மீகத்திலும் கார்காலத்தின்தோற்றம் விரிவாக வருணிக்கப்பெற்றிருக்கின்றது. ஆயினும்,அங்குக் கவிக்கூற்றாயமையாமல், இராமன் இலக்குவனுக்குக் கார்காலச் செய்திகளைக் காட்டி இயம்பும் பான்மையில் இவ்வருணனை நடைபெறக் காணலாம். அவ்வாறு வடநூலில் சொல்லி வரும் இராமன், இறுதியாக,

"இப்போது கோசலாதிபனாகிய பரதன் மற்றுங் காரியங்களை யெல்லாம் செய்து முடித்து விட்டுப் பொருள் சேர்த்துக்கொண்டு ஆஷாட பௌர்ணமி விரதத்தைத் தொடங்கியிருப்பான். எனது வருகையைக்கண்டு அயோத்தியில்எழும்பும் ஒலிபோலும் ஒலியுடையதாகிச் சரயுநதியில்இப்போதுநீர்நிறைந்து வெள்ளம்பெருகும். மழைக்காலத்தின் குணமெல்லாம் இப்போது நிறைந்திருக்கின்றது. சுக்கிரீவன் தன் பகையை வென்று மனைவியை அடைந்து, பெரிய இராச்சியத்தில் நிலைபெற்றுச் சுகமடைந்தனன்.நான் மனைவியையும் பெரிய விசாலமான இராச்சியத்தையும் விட்டு ஆற்றங்கரையைப்போலத் தேய்வுற்றிருக்கின்றேன். எனது துக்கத்தின் பெருமையும் மழைக்காலத்தின் அடைதற்கரிய தன்மையும்,இராவணனுடைய பெரிய பகைமையும் எனக்கு அபகாரமாகத் தோன்றுகின்றன"

என இயம்பி ஏங்கினான் என்று கூறப்பட்டிருக்கின்றது. கம்பர் இங்கு, இராமன் சீதையைப்பிரிந்திருந்த நிலையை அக்கார்காலத்துடன் சார்த்தினான்றி அவன் இராச்சியத்தை இழந்தானென்ற நிலையின் நினைவோ எழாமல் முழுவதும்காக்கின்றார்.எனின்,சுக்கிரீவன் பெற்றபேற்றினைக்கருதி இராமன்,பொறாமைகொண்டான்போலப் பேசியசில சொற்களுக் கிணையான சிந்தனைகள் இங்கு மேவாதிருந்த மேன்மையை இயம்புவானேன்.

# அணியிலக்கணம்

[15-வது பக்கத் தொடர்ச்சி]

## பாவிக அணி.

கவிதைக்குக் கைத்துணையாய் நின்று, எந்நிலையிலும் எச்செயலிலும் எக்காலத்திலும் ஒரு முழுமையின் நினைவை எழுப்பித்தருகின்ற உள்ளத்தின் ஊக்கமே அணிகளின் அமைப்பிற்கு ஆதாரமாகநிற்கும் ஒரு தத்துவம் ஆகுமென்பது முன்னுரையில் கூறப்பெற்றது. அழகு என்று அழைக்கப்படுவதெல்லாம் இம்முழுமையின் சாதனையே. உணர்விற்கு உகந்ததாய் அழகு என நிற்கும் இதுவே, அறிவின் ஆராய்ச்சிக்கு இலக்காகும்போது மெய்ம்மையென்றும், மனதினுள் தவழ்ந்து நிலவுகின்றபோது அருள்என்றும் இனிமையுற ஏற்றுக்கொள்ளப்பெறுகின்றது. தத்துவ நிலையில் இம்மூன்று முகங்களையுடைய இக்கடவுளின் தோற்றங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று இயற்கை(nature),மற்றது கலை (art). எங்கெங்கே அழகு தோன்றுகின்றதோ அங்கங்கெல்லாம்,மெய்ம்மையின் உறுதியும் அருளின் உருக்கமும் உடனுடன் காணப்படுகின்றன. கடலின் பரப்பிலும், விசும்பின் விரிவிலும், அந்தி வானத்திலும், மேகக் கூட்டத்திலும்,/மதியின் கதியிலும், வனத்தின் வளத்திலும், மலரின் பொலிவிலும், மானின் விழியிலும், மயிலின் சாயலிலும், குயிலின் குரலிலும், மகவின் சிரிப்பிலும், இயற்கையா யமைந்த வொரு தத்துவம் நமது உள்ளத்தில் உவகையை ஊட்டி உற்சாகப்படுத்துங்கால் அன்னதனை இயற்கையழகு என்று அழைப்பது மரபு. இவ் வியற்கையழகில் ஈடுபடுவாரனைவரும் ஒருபுறம்மெய்ம்மையும் மறுபுறம் அருளையும் எய்துதற்கு வேண்டிய வசந்திகள் அனைத்தையும் அவ்வழகினின்றே பெற்றவ ராவார். இம்மூன்றிற்கும் உள்ள நெருங்கிய இத்தொடர்பினையும், இயற்கையின் ஈடுபாட்டினால் இவை விளைகின்ற தன்மையையும், ஆங்கிலக்கவி ஆல்ப்ரேட் டென்னிஸன் (Alfred Tennyson)என்பவர்எழுதிய "காரிகையார்க்கண்டகனா" (A Dream of Fair Women) என்னும் தம் நூலினுள் வருகின்ற சில செய்யுள்களில் செவ்விதின் காட்டியிருக்கின்றார். பண்டைக்காலத்தில் விளங்கிய ஜெப்தா என்னும் ஒரு வீரன், தெய்வ விரோதிகளாயிருந்த பகைவருடன் போர்புரியப் புறப்பட்டபோது, தான் வெற்றிபெற்றால், தன்னூர் திரும்பிவந்தவுடன் முதன்முதல் தன்னுடையகண்களுக்குத் தென்

படுவது எதுவேயாயினும் அதனைக்கடவுளுக்குப் பலி கொடுத்துவிடுவதாகச் சபதம் செய்தான். வெற்றியும் வாய்த்தது. ஆயினும், விதியின் விபரீதத்தால், வெற்றியுடன் திரும்பிவரும் தன் வீரத்தந்தையை, அவனது அருமைப் புதல்வி, மங்கைப்பருவத்தின் வனப்பெல்லாம் வாய்ந்த கன்னியே, வாத்தியங்கள் முழங்க இன்னிசைகள் பாடி அளப்பரிய வுவகையுடன் எதிர்கொள்ள ஏகினள். ஆதலின், இவன் செய்தள சபதத்தின்படி இவளையே பலிகொடுக்கவேண்டியவனாய் மனமுளைந்து ஆற்றமாட்டாத் துயரத்தோடும் அவளைத் தழுவியணைத்து, "ஐயகோ, நங்காய், நான் பெற்ற வெற்றிக்கு இந்த விலை ஈதல் வேண்டுமென்று நினைத்திலனே! காதலின் இன்பம் துய்த்தாயல்லை, மகவின் முகம் கண்டாயல்லை; நின் இன்னுயிரை கடவுளுக்கு முறை செய்யவேண்டியவனாயினேனே! நின் ஆயுள் முடிகின்றது; ஆயினும், இன்னும் திங்களொரு மூன்றேனும் மகளே நீ வாழ்க—அக்காலத்தை, மலையிலும் வனத்திலும் வைகிக் கழித்து வருவாய்" என அரிதின் அனுப்பினன். இக்கதியை நினைத்து வருத்தமுடன் சென்ற அந்நல்லாள் மீண்டுவந்து தன் விதியை மனமுவந்து ஏற்றுக்கொண்ட இயல்பினை அவளே, டென்னிஸனது கனவினுள் தோன்றிப் பின்வருமாறு இசைத்திருக்கின்றனள்:—

And I went mourning "No fair Hebrew boy
Shall smile away my maiden blame among
The Hebrew mothers"—emptied of all joy,
Leaving the dance and song
Leaving the olive gardens far below,
Leaving the promise of my bridal bower,
The Valleys of grape loaded Vines that glow
Beneath the battled tower·
The light white cloud swam over us· Anon
We heard the lion roaring from his den;
We saw the large white stars rise one by one,
Or, from the darkened glen,
Saw God divide the night with flying flame,
And thunder on the ever lasting hills·
I heard Him for He spake, and grief became
A solemn scorn of ills·
When the next moon was rolled into the sky
Strength came to me that equall'd my desire·
How beautiful a thing it was to die
For God and for my sire!
…………nor once alone, a thousand times
I would be born and die·

[என் இனத்துத் தாய்மார் முன்னிலையில், அழகிய மகவு ஒன்று எனக்குப்பிறந்து என் கன்னிமைப் பழியைச் சிரித்துத் தீர்த்திலனே என்னுந் துயரம் உழக்க, எல்லா இன்பமும் இழந்தவளாகி, நடனமும் பாட்டும் நந்தவனங்களும் பின்னே விட்டு, மணவறைப்பள்ளி நயமுற எய்தும் நம்பிக்கையுமின்றி, கோட்டையுங் கொத்தளமுங் கீழாக, நடந்தனென் சென்று மலைமிசை ஏகினேன்.

மெல்லிய வெள்ளைமேகங்கள் எம்மேல் நீந்தின. முழையினின்று சிம்மம் முழங்கக்கேட்டோம்; பெரிய பெரிய விண்ணின் வெண்மீன் ஒன்றொன்றாக உதிப்பது கண்டோம். மற்று, இருளின்செறிவில், பறக்குஞ் சுடரால் (மின்னல்) இரவினைக் கடவுள் பிரிக்கப் பார்த்தோம் (தானும், தன் தோழிமார்களும்). உலைதல் இல்லாமலைகளின்மீது இடிக்கவும் இடித்தனர். இதனாற்கடவுள் மொழிந்தனர் ஆதலின் செவியுற மடுத்தேன். அந்தக் கணமே, என்றன் துயரம், (பிறர் எனக்குச் செய்த) கொடுமையைப் பொருள்படுத்தாமல் எள்ளித்தள்ளுமொரு புனிதமுடைய இகழ்ச்சியேயாக மாறிப் போயது. அடுத்த திங்கள் வானினில் உருள உந்தியபோது (அதாவது, இப்படி ஒருமாதகாலம்கழிந்தபின்) என்னுடைய விருப்பிற் கிணையே யான வலிமையுமெனக்கரிதின்வந்து கைகூடப்பெற்றேன்—கடவுளின்பொருட்டுமென் தந்தையின் பொருட்டும் எத்துணை யழகிது சாதல் தானே……..ஒருமுறை தானோ, ஆயிரம் முறைகள் பிறந்து பிறந்து இன்னணம் சாவேன் கண்டாய் நானே.]

இயற்கைவளத்தின் அழகில் ஈடுபட்ட இந்நங்கை, கடவுள்மெய்ம்மையின் ஒருஉணர்வும் தந்தைக்குரிய அன்புந் திரண்டெழுந்த உள்ளத்துடனே, பிறர் தனக்குக் கொடுமை இழைத்தனர் என்பதனைய எண்ணமெல்லாம் இகழ்தற்கொத்த பொய்யேஎன்னுமொரு செவ்விய நிலையை எய்தி, துயரந் தீர்ந்து அச்சம்நீங்கி, மெய்ம்மைக்கும் அன்பிற்கும் தன்னை முறைசெய்து தருதல்வேண்டும் என்னுமொரு விருப்பமே மிக்கவளாகி, அவ் விருப்பத்திற்கேற்ற மனத்தின் திட்பமும் பெற்று, மரணத்தை வென்று, மெல்லியல் மங்கை என்னற்கோர் குறைவும் இன்றியேயும் ஓர் வீரமகளாகவும் மாறலாயினள். அழகு என்னும் அத் தத்துவத்தின் தோற்றங்களில் ஒருவகையாகிய இயற்கையால் இந்நல்லாளுக்கு வாய்த்த நற்பெருஞ் செல்வம் ஆம் இது.

அழகினது தோற்றமாயமைந்த மற்றையவகை, கலை என அழைக்கப்படுகின்றது. சிற்பம் சித்திரம் நடனம் சங்கீதம் காவியம் இவைகளெல்லாம், கலைகளாம். இவைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வோர்வழியில் ஒவ்வோர் அளவில் அழகென்னுந் தத்துவத்தை நமக்குப் புலனாக்கி நம்மை அவ்வழகிலீடுபடச்செய்து, உயரிய உவகையைஉண்டாக்கி, மெய்ம்மையின்பாலும் அன்பின்பாலுங் கொண்டுசேர்த்து நனிமிகப் புனிதமாக்குகின்றது. அழகு என்பது ஒன்றே. இயற்கையிலே தோன்றுவதும் அவ்வொரு அழகுதான்; கலைகளில் தோன்றுவதும், எந்தக் கலையேயாயினும், அவ்வழகே தான். இயற்கையழகு கடவுளால் அமைக்கப்படுவதென்றும், கலையழகு மனிதரால் அமைக்கப்படுவதென்றும், கூறலாம். இக் கலையழகினை அமைக்குந் திறமையைப் புலமை என்று அழைக்கின்றனர். கடவுளின் படைப்பாற்றலுக்கு நிகராக மனிதனில் இப் புலமையும் நிற்பதாற்றான், மெய்ப்புலமையானது தெய்வப்புலமை என்று பாராட்டப் பெறுகின்றது. அன்றியும், கலைகள் இயற்கையைப்பின்பற்றியேஇயற்றப்படவேண்டுமென்பது பெருவழக்காயிருப்பதை யாவரும் அறிவார். இயற்கைத் தோற்றங்களினின்றும் மானுட வாழ்க்கையின் இயற்கை அம்சங்களினின்றும் அழகினது நுட்பத்தினைக் கற்றுக்கொண்டு கற்ற அதனை நயமுறக் காட்டலே கலையின் தொழில் என்பர். இன்னவாறு புலவர்தம் மதியினால், ஆய்ந்து தேர்ந்து தெளிந்து, தெளிந்த அப்பொருளை நமக்கு உணர்த்தியபின்னரே, இயற்கைத் தோற்றங்களிலும் மானுட வாழ்க்கையிலும் அமைந்துள்ள அழகினை நாம் காணக்கூடியவர்களாயிருக்கின்றோம். இதனை உட்கொண்ட ஆஸ்க்கார் வைல்ட் என்னும் ஒரு ஆங்கில சிந்தனையாளர், பழைய உண்மைகளைத்தலைகீழாக மாற்றி உலகம் மலையும்படி பேசி, அவ் வுண்மையை மறுப்பார்போல் நனி நடித்து அதன்உண்மையையே உறுதியுறச் சாதித்துவிடின்ற தம்திறமைக்கும் முறை



மைக்கும் இணங்க, "இயற்கையினிடத்திலிருந்த கலைகள் எதையுங் கற்றுக்கொள்ளவில்லை; மற்று, கலைகளினிடத்திலிருந்துதான் இயற்கையும் மனிதவாழ்க்கையும் தம்முடைய அழகு செம்மை அனைய அனைத்தையும் கற்றுக்கொண்டிருக்கின்றன" என்ன விந்தையுறச் சாற்றியிருப்பது சிந்தித்தற்குரியது. இச் செவ்வியில் அவர் இயம்பிய சில வாசகங்கள்சாலச் சுவை தரும்:—

"நமது தெருக்களை மூடிநிற்கும் செந்நிறங்கலந்த பனி எங்கே பிறந்தது? நமது அருவிகள் கொழிக்கும் முத்தும் இரத்தினமும் அவைகளுக்குஎங்கேகிடைத்தன? காலைச் சூரியனும் மாலைமதியமும் காட்டும் திப்பியஅழகெல்லாம் அவைகளுக்கே உரியவோ! கலையினது ஆற்றலேயல்லவா இவைகளுக்கெல்லாங் காரணம்!……இயற்கை என்பது தான் என்ன? உன்னையும் என்னையும் பெற்ற அன்னையா, அவள்? இல்லை இல்லை! நம்மால் சிருஷ்டிக்கப்பட்ட குழந்தையே அவள். அவள் உயிர்பெற்றுத் திரண்டது நம மனத்திலேதான். கலையின் அழகும் சுவையும் இயற்கையில் இல்லை. நாம் இயற்கையைப் பார்க்கின்ற முறையிற்றான் அது சிறப்பைப்பெறுகின்றது. நமக்குஇந்தப்பார்வையைத் தருவதுகலைமலிந்தமனோபாவம். ஒருவன்கண்ணால் ஒரு பொருளைக்கண்டு அளவிலேயே பார்த்துவிட்டான் என்று சொல்ல முடியாது. அப்பொருளில் இல்லாத அழகை இவன் இருப்பதாகப் பாவித்துப் பார்க்கின்ற வரையில் ஒருவனும் பார்த்தவனாகமாட்டான். பார்ப்பவர் அனைவரும் பனியையும் மதியையும் மலரையும் பார்க்கின்றார்களா? இல்லையே. இவைகளுக்குக் கவிகளும் சித்திரகாரர்களும்கொடுத்திருக்கின்ற அழகினாற்றான்நாம் அவைகளைப்பார்க்கின்றோம். கவிகள் பாடிவைத்திருக்கின்ற அழகினையே பின்னர் நாம் அவைகளிற் காண்கின்றோம். சிற்சிலபோது நம் மனவளர்ச்சிக்கும்கலையுணர்விற்கும் ஏற்றபடி புதியதொரு அழகையும் சுவையையும் அவைகளிற் கண்டுஅனுபவிக்கின்றோம். ஆயிரம்ஆயிரம் வருஷங்களாக இவை இருந்து வந்தாலும், இவைகளைப் பார்த்தது ஆர்? கவிகள் சிருஷ்டித்தபிறகே, மதியமும் மலரும் மலையும் அருவியும்இயற்கைவனப்பின் வளப்பமனைத்தும், ஏற்பட்டனவென்னலாம்] $

எனின், இன்னவாறு, புலமையோர் இயற்கையுடன்வாழ்க்கையையும் தாம்பாவனைசெய்துகொண்ட தன்பயனைப் பெய்துபாடியிருக்கிற நூல்களேகாவியம் எனப்படுதல் வேண்டும். காவிய முழுவதும் ஊடுருவி நின்று அதன் முழுமைத் தன்மையை உட்கொண்டு நிற்பதைத் தண்டிஆசிரியர் ஒரு அணியாக எடுத்து அதனைப் பாவிகம் என்று அழைக்கின்றார். "பாவிகம் என்பது காப்பியப்பண்பே" என்பது சூத்திரம். இவ்வணியின் தோற்றம் இவ்வாறாக, இதன் இலக்கணத்தை அடுத்த இதழில் ஆராய்வோம்.

$ **ஆஸ்காரர் வைல்டின்** இவ்வரிய கருத்துக்கள் அடங்கிய கட்டுரைமுழுவதும் பொழிபெயர்ந்து, 1928 வருஷத்திய, 49 50, 51, 52-வது இதழ்களில் "பொய்யாற் பொலிவது புலமை" என்னுந் தலைப்பின்கீழ் வந்திருக்கின்றது கலைப் பயிற்சியில்ஈடுபட்டிருப்போர் அனைவரும்அதனைமுயன்று கற்றல் சாலப் பயன்தரும்.


# கலா நிலயம்

## முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன
## உடனே பெற்றுக்கொள்வது நலம்.

**1928, 1930, 1931, 1932, 1933, 1934** வருடத்தியவை கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ. | 7 | 8 | 0 |
| ஆப்லெதர் கில்ட் பைண்ட் ” | 9 | 0 | 0 |
| ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது | 10 | 0 | 0 |

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னுப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினல், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.



KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

கிறிஸ்தவர் உறுதி:—கோவாவில் கிறிஸ்தவக் கோவில்களில் ரோமன் கத்தோலிக்கர்களிடையே இருந்துவரும் வித்தியாசம் ஒழியாவிட்டால் கோவாவில் இப்பொழுதிருக்கும் 2 லட்சம் கத்தோலிக்கர்களும் இந்துமதத்தில் சேர்ந்துவிடுவதாய்க் கோவாமக்கள் கத்தோலிக்க மகாநாட்டிற்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்.

*  *  *

பசுக்களின் நல்லறிவு:—ஆஸ்திரேலிய நாட்டுப் பசுக்கள் நல்ல அறிவுள்ளவை. பல பசுக்களுக்கு ஒருவர் வீதியில் கவாத்து பழக்கிக் கொடுத்துக்கொண்டிருந்தார். பசுக்கள்யாவும் வரிசையாகநின்றுகொண்டிருந்தன. அந்நேரத்தில்அவ்வழியாக ஒருமோட்டார் அதிவேகமாக வந்துகொண்டிருந்தது. வீதியில் வரிசையாக நின்ற பசுக்களெல்லாம் ஒழுங்காக விலகி நின்று மோட்டாருக்கு வழிவிட்டன. மோட்டார் சென்றதும் மீண்டும் முன்போல் கவாத் செய்ய அணிவகுத்து நின்றன.

*  *  *

உலகில் நெடியவர்:—உலகிலேயே மிகவும் உயரமான மனிதர் எகிப்துதேசத்தில் இருக்கிறார். இவர் மகமத்காஜி என்ற கட்டிட வேலைக்காரர். இவர் சில காலம் ஆறடி உயரந்தான் இருந்தாராம். ஒரு தடவை மரத்திலிருந்து விழுந்து தலையில் காயம்படவே இவர் உயரம் அதிகமாகிக்கொண்டே வந்ததாம். இப்பொழுது இவர் உயரம் சுமார் பத்து அடி. இவரது உயரத்தை டாக்டர்கள் குறைக்க எவ்வளவோ முயன்றும் பயனில்லை.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
1933 Results.
New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.
Specialities.
Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.
For agencies please apply to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.
A sound Company.
Please apply for particulars to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

இண்டோ-கம்மர்ஷியல்
பாங்க், லிமிடெட்.
மாயவரம்
சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்
எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதராஸ்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்;
26 பிராட்வே, மதராஸ்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷியூரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை } அல்லது { இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)